PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY

ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

25.05.2016 - மலர் 13, இதழ் 13

## கைப்பேசியில் வீட்டின் திறப்பு





கடலில் கழிவுகளைக் கொட்டுவதில் இலங்கைக்கு ஐந்தாம் இடம்!



## உயிரினங்களுக்கு பெயர் சூட்டப்பட்ட விதம்



இலங்கை மாணவனின் ஆக்கத்திறன் வெளிப்பாடு






## இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**1. இந்த இடம் குறிப்பது;**

1. பூங்கா 2. பாடசாலை 3. சந்தை

**2. பிள்ளைகள் இங்கு எதற்காக செல்கின்றன?**

1. விளையாடுவதற்கு
2. கல்வி கற்பதற்கு
3. நண்பர்களை சந்திப்பதற்கு

**3. இங்கு செல்வதால் பிள்ளைகள் அடையும் நன்மைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.**


.................................................................

.................................................................

.................................................................




**பொருத்தமான சொல்லை எழுதி இடைவெளிகளை நிரப்புக**



1. பசு ............ தரும்.
2. ........... புல் மேயும்.



1. நாய் ............. மிருகம்.
2. .............. குரைக்கும்.




1. .............. வேகமாக ஓடும்.
2. குதிரையில் ஏறி ............. செல்லலாம்.



1. ..................... பாலைவனத்தில் வாழும்.
2. ..................... நீரின்றி நீண்டநாள் இருக்கும்.

**இங்குள்ள படங்களுக்கு அருகில் அவற்றுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக**



| | |
|---|---|
| a) Corn | h) carrot |
| b) Onion | i) Broccoli |
| j) Green pepper | j) garlic |
| k) Tomato | k) yellow pepper |
| l) Lettuce | l) Raddish |
| m) Mushrooms | m) chili |
| n) Peas | n) eggplant |





உதாரணம்: பல் துலக்கு










**படங்களில் காட்டப்படும் செயற்பாடுகளை இரண்டு அல்லது மூன்று சொற்களில் எழுதுக.**

-ஜரு

Digitized by Noolaham Foundation.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி
கொழும்பு -02
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

மனிதனின் பெரும் செல்வம் நோய்கள் அற்ற ஆரோக்கியமான வாழ்க்கையாகும். எனினும், இது பற்றி நாம் ஆழமாக சிந்தித்துப் பார்ப்பதில்லை. ஏதேனும் ஒரு நோயின் பாதிப்புக்குட்பட்டு உடல் இயங்க முடியாமல் இருக்கும்போதுதான், ஆரோக்கிய வாழ்க்கையின் அருமை புரியும்.



# நோயாளிகளுக்கு உதவ முன்வாருங்கள்

நோய்களினால் பாதிக்கப்பட்டு உதவியின்றி துன்பப்படுபவர்களும் நம் மத்தியில் இருக்கின்றனர். இவர்களில் வயது முதிர்ந்த நிலையில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைகளில் துன்புறுகின்றவர்களும் உள்ளனர். இவ்வாறு நோய்களால் பாதிப்புற்று இருப்பவர்களை நாம் புறக்கணிக்கக் கூடாது. எந்தவொரு வயதிலும் நாமும் நோய்களால் பாதிக்கப்படலாம். ஆகவே, பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் நோயாளிகளுக்கு எவ்வாறான உதவிகளை வழங்கலாம் என்பதை இங்கு நோக்குவோம்.

## மருத்துவரை அணுக உதவுதலும் விழிப்புணர்வு வழங்கலும்

நாம் ஒரு மருத்துவராக இல்லாவிட்டாலும், நோயாளிகளுக்கு தேவையான உதவிகளை எங்களால் செய்யக்கூடியதாக இருக்கும். சரியான நேரத்திற்கு சிகிச்சைகளைப் பெற உதவி செய்தல், குறிப்பிட்ட நோய் பற்றி வாசித்தறியக்கூடிய நூல்களை வழங்குதல், நோய்கள் குறித்து அறிவுறுத்தல் மற்றும் தெளிவுபடுத்துதல் என்பன நீங்கள் செய்யக்கூடிய உதவிகளில் சிலவாகும்.



## விபத்துக்களின்போது உதவுதல்

பாடசாலை நண்பர்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டால் உதவி செய்யத் தயங்காதீர்கள். சிலவேளைகளில் காலை ஆகாரம் இன்றி பாடசாலை வரும் உங்கள் நண்பர்கள் உடல் பலம் இழந்து மயங்கி விழலாம். இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்குத் தெரிந்த முதலுதவிகளைச் செய்யத் தயங்காதீர்கள். அவர்களுக்கு உணவு, குடிப்பதற்கு தண்ணீர் என்பனவற்றை வழங்கியும் அவர்களுக்கு உதவலாம்.



## நோயாளிகளின் மனநிலையை சரிப்படுத்தல்

உடல் ரீதியிலான நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் பெரும் மன வேதனை மற்றும் மன உளைச்சலுக்கு உட்பட்டவர்களாக இருப்பர். சுறுசுறுப்பான வாழ்க்கையின்மை, மற்றவர்களுக்கு சுமையாக இருப்பது போன்ற உணர்வு, வேதனை, பண வசதியின்மை போன்ற காரணங்களினால் நோயாளிகள் இந்த மனநிலைகளுக்கு உட்படுகின்றனர். எனவே, இவ்வாறான நோயாளிகளுடன் அன்பாகப் பேசுதல், மன அமைதியினை ஏற்படுத்தும் கருத்துக்களைப் பகிர்தல், ஆறுதல்படுத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டால், அவர்களின் மனநிலை சரிப்படுத்தப்படலாம்.





## உதவி புரிதல்

பலவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களை நீங்கள் அறிந்திருக்கக்கூடும். முதியோர் இல்லங்களிலும் சிறுவர் இல்லங்களிலும் மருத்துவமனைகளிலும் இவ்வாறானவர்கள் இருப்பார்கள். அவர்களை இனங்கண்டு தேவையான உதவிகளை செய்யலாம். நண்பர்களுடன் சேர்ந்து அத்தகையோர் இருக்கும் இடங்களுக்குச் சென்று உதவிகள் செய்யலாம். உதாரணமாக: குளிப்பாட்டுதல், உணவு ஊட்டுதல், ஆடைகளை அணிவித்தல், நடைப்பயிற்சிக்கு உதவுதல், ஆடைகளைக் கழுவிக்கொள்ள உதவுதல், இருக்கும் இடம் மற்றும் சூழலை துப்புரவு செய்தல் போன்ற உதவிகளை செய்யலாம். அத்துடன், உங்கள் வீடுகளில் இருப்போருக்கும் இவ்வாறான உதவிகள் தேவைப்படின் முகம் சுழிக்காமல் செய்து வாருங்கள். உங்களது தாய்வழி-தந்தைவழி பாட்டன், பாட்டிகளுக்கும் நீங்கள் உதவிகள் செய்யலாம். பெற்றோருக்கும் இவ்வாறு உதவலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிந்தித்து செயற்படு



ஒருநாள்... காட்டில் வாழ்ந்த நரிக்கு தண்ணீர் தாகம் எடுத்தது. காட்டில் எங்கு தேடியும் அதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அதனால், காட்டை அண்மித்த ஊரில் இருந்த கிணற்றடிக்கு வந்தது. அந்தக் கிணற்றில் வாளியுடன் கயிறு ஒன்று தொங்கிக் கொண்டிருந்ததை நரி கண்டது.

சிறிதேனும் சிந்திக்காது ஒரே பாய்ச்சலில் வாளியில் தாவி ஏறிக்கொண்டது. உடனே வாளியும் கிணற்றினுள் சென்றது. அதன்பின்னர் நரி தாகம் தீர தண்ணீரைக் குடித்த பின்னர் மேலே பார்த்தது. 'அய்யோ, யோசிக்காது உள்ளே வந்து விட்டோமே எப்படி இங்கிருந்து வெளியேறுவது' என்று யோசிக்கத் தொடங்கியது.

அந்த நேரத்தில் ஒநாய் ஒன்று அந்தக் கிணறு அருகே வந்தது. கிணற்றினுள் ஏதோ சத்தம் கேட்கிறதே என ஓநாய் கிணற்றின் உள்ளே எட்டிப்பார்த்தது. "அடடா! நரி ஐயா, உள்ளே என்ன செய்கின்றீர்கள்" எனக் கேட்டது ஓநாய். சிறிது யோசித்த நரி "ஓ அதுவா... நான் இப்போது சொர்க்கத்தில் இருக்கின்றேன். இங்கு அனைத்து வகையான உணவுகளும் உறங்குவதற்கு அழகான படுக்கையும் தந்துள்ளார்கள். பிறகு என்ன வேண்டும்" என்றது நரி.

இதனைக் கேட்ட ஓநாய் பொறாமையுடன் "நானும் அங்கு வரலாமா?" என்று கேட்டது. "ஓ தாராள மாக இந்த வாளியின் மறுமுனையைப் பிடித்து உள்ளே வா" என சொல்லிக்கொண்டே நரி வாளியில் ஏறி அமர்ந்தது.

ஓநாய் வாளியின் மறுமுனையை பிடித்துக்கொண்டு கிணற்றின் உள்ளே சென்றது. அப்போது நரி அமர்ந்திருந்த வாளிமேலே வந்தது. மேலே நரி செல்லும்போது, ஓநாயைப் பார்த்துப் புன்னகையுடன் "நான் இப்போது சொர்க்கத்திற்கும் மேலான இடத்திற்குப் போகிறேன்" என்றது. மேலே வந்ததும் வாளியிலிருந்து நரி தாவிக் குதித்துத் தப்பியோடியது. பாவம் ஓநாய் செய்வதறியாது கிணற்றினுள் கிடந்தது.

# ஆழ்ந்த சிந்தனை....

ஒரு நாட்டின் மன்னனிடம் சுயமாக சிந்திக்கத் தெரியாத முட்டாள் ஒருவன் ஊழியனாக இருந்தான். ஒருநாள் வெளியூர் ஒன்றுக்குப் புறப்பட்ட மன்னன் அந்த ஊழியனையும் துணைக்கு அழைத்துச் சென்றான். அந்த ஊரினை அடையும் முன்னர் இருள் சூழ்ந்தமையால் செல்லும் வழியில் அமைக்கப்பட்ட சத்திரத்தில் தங்குவதற்கு மன்னன் முடிவு செய்தான்.



சத்திரத்தின் வெளியில் இருந்த மரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு ஊழியனிடம் "இரவு முழுவதும் தூங்காமல் குதிரையைப் பார்த்துக்கொள்" எனக் கட்டளையிட்டான் மன்னன். "இரவு முழுவதுமா? எப்படி தூங்காமல் இருப்பது?" என சந்தேகம் கேட்டான் ஊழியன். அதற்கு மன்னன் "ஏதேனும் தீர்க்க முடியாத பிரச்சினை பற்றி சிந்தித்துக்கொண்டிருந்தால் தூக்கம் வராது" என்றார். ஊழியனும் சரி என்று சிந்திக்கத் தொடங்கினான். மன்னன் சத்திரத்திற்குள் சென்று உறங்கினான். சிறிது நேரத்தில் கண்விழித்து வெளியே வந்த மன்னன் குதிரை இருப்பதைக் கண்டு மகிழ்வுடன் ஊழியனிடம் வந்தான். "மன்னா நான் தூங்கவில்லை. வானில் இருக்கும் நட்சத்திரங்கள் தானாக வந்ததா? இல்லை யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா? என் சிந்திக்கின்றேன்" என்றான் ஊழியன். "சபாஷ்" என்று கூறிய மன்னன், உறங்கச் சென்றான்.

சில மணித்தியாலங்களின் பின்னர் கண் விழித்த மன்னன் மீண்டும் வெளியே வந்தான். அப்போதும் உறங்காத ஊழியன் சிந்தனையில் இருந்தான். அவன் அருகே சென்ற மன்னன் "இப்போது எதனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு இருக்கிறாய்?" என கேட்டான். அப்போது 'மன்னா! கடலில் உப்புத் தானாக உருவாகியதா? அல்லது யாரேனும் கொண்டு வந்து கொட்டினார்களா? என்று சிந்திக்கின்றேன்" என்றான். "சரி இவ்வாறே சிந்தித்துக்கொண்டிரு விடிந்ததும் ஊர் போய் சேருவோம்" என்று கூறிவிட்டு நிம்மதியாக உறங்கச் சென்றான் மன்னன்.

காலையில் எழுந்த மன்னன் ஊழியனைக் காணச் சென்ற போது, ஊழியன் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதைப் பார்த்தான் "சேவகா! இப்போது எதனைப் பற்றிச் சிந்திக்கின்றாய் எனக் கேட்ட போது, "மன்னா தங்கள் குதிரை தானாக ஓடிவிட்டதா? இல்லையேல் யாரேனும் திருடிச் சென்றார்களா? என சிந்திக்கின்றேன்" என்றான் ஊழியன்.

மன்னனோ திகைத்துப் போனான்.

# வளைந்த மரங்களைக் கொண்ட மரக்காடு



சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்தியுள்ள இந்த மரக்காடு போலந்து நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ளது. 1930 ஆம் ஆண்டளவில் பயிரிடப்பட்ட பைன் மரங்களே இவை. எனினும், இவை அனைத்துமே அடிப்பகுதியில் ஒரே விதமான வளைவுடனும் மிகுதிப் பகுதி நேராகவும் வளர்ந்துள்ளமை ஆச்சரியம் மிக்கதாகவே உள்ளது. இந்த பைன் மரக்காட்டை ஆய்வுசெய்த விஞ்ஞானிகள் இதற்கு Crooked Forest என்று பெயர் சூட்டியுள்ளனர். இதற்கு அர்த்தம் 'கோணலான மரக்காடு' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA PUBLIC LIBRARY




# உலகில் பிரபல்யமானவர்கள்

## ம.பொ.சி

மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம் என்னும் இயற்பெயரை கொண்டவர் தான் ம.பொ.சி ஆவார். இவர் தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலுள்ள மயிலாப்பூர் எனும் பகுதியில் 1906 ஆம் ஆண்டு 26 ஆம் திகதி பிறந்தார். இவர் சிறந்த போராட்ட வீரரும் தமிழறிஞரும் ஆவார். தமிழ் இலக்கியம் மீது பெரும் ஆர்வம் கொண்ட இவர் சிலப்பதிகாரத்தில் அதிக பற்றுடையவராகவும் திகழ்ந்தார். அதனால் 'சிலம்புச் செல்வர்' எனும் பெயரால் இவர் அழைக்கப்பட்டார்.

மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவரால் மூன்றாம் ஆண்டினைத் தாண்டிப் படிக்க முடியவில்லை. வறுமையின் பிடியில் சிக்கிய இவர் குழந்தைத் தொழிலாளியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து அச்சுக் கோர்க்கும் பணியினையும் பல காலம் தொடர்ந்தார். காங்கிரஸ் இயக்கத்தின் சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார். இவருடைய போராட்டங்களில் குறிப்பிடத்தக்க முக்கிய சில



போராட்டங்களும் உள்ளன. அவற்றில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என பெயர் சூட்டப்பட்டிருந்த தமிழ் நாட்டிற்கு அப்பெயரை எதிர்த்து தாய்மொழியில் 'தமிழ்நாடு' என பெயர் சூட்டப் போராடியமை குறிப்பிடத் தக்கதாகும்.

காலப்போக்கில் அதிக ளவில் இவர் போராட்டங்களில் ஈடுபட்டதால் சிறைவாசம் செல்ல நேர்ந்தது. ம.பொ.சி அவர்கள் சிறையில் இருந்த அக்காலங்களை வீணாக்காது முன்னோர்கள் படைத்த பல இலக்கியங்களை கற்றுத் தேர்ந்தார். குறிப்பாக பாரதி படைப்புகள், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற எண்ணற்ற தமிழ் இலக்கியங்களில் புலமை பெற்றார்.

'கப்பலோட்டிய தமிழன்' எனும் நூல் இவரின் எழுத்தாற்றலை உலகுக்கு அறிய செய்தது. அது மட்டுமன்றி பல ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் இலக்கியத்திற்காக ம.பொ.சி. அவர்கள் எழுதியுள்ளார். இவர் 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி இம்மண்ணுலக வாழ்வை விட்டு நீங்கினார்.

(தொகுப்பு: ஜுனைட் எம்.பஹ்த்)

# Wi-Fi வேண்டாம் வருகின்றது Li-fi

தற்போது நாம் பயன்படுத்தும் இணைய இணைப்பான Wi-Fi யை விடவும் மிக வேகமாக பயன்படுத்தக்கூடிய Li-Fi (Light Fidelity) என்ற இணைய இணைப்பை கண்டுபிடித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தொழில் நுட்பமானது, நமது இல்லங்களில் LED விளக்குகளை ஒரு ஆளியை அழுத்தினால் எப்படி வெளிச்சம் கிடைக்குமோ அது போன்று தான் எதிர்வரும்




காலங்களில் இணைய இணைப்பை பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது, விசேட LED ஒளி அலைகள்மூலம் அதிவிரைவில் தகவல்கள் கடத்தப்படுகின்றன.

Wi-Fi யைவிடவும் 100 மடங்கு வேகம் கூடிய இந்த Li-Fi தொழில்நுட்பமானது "நுகர்வோருக்கு எவ்வித பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாது" என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

# டென்மார்க்

வட ஐரோப்பாவில் அமைந்துள்ள டென்மார்க் ஒரு குடாநாடாகும். இந்த நாடு கீழ் வடவரைக்கோளத்தில் அமைந்திருப்பதால் இங்கு வெப்பமான காலநிலை நிலவுகின்றது. இங்கு 1660 ஆம் ஆண்டு முதல் முடியாட்சி ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து 1849 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05 ஆம் திகதி டென்மார்க் அரசியலமைப்பில் கையொப்பமிட்டதோடு, முடியாட்சியுடன் ஜனநாயக அரசியலமைப்பு உருவானது. பின்னர் நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடாகியது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள மில்லியன் கணக்கான உயிரினங்கள் குறித்த ஆழமான தகவல்களைப் பெறுவதற்காகவே அனைத்து உயிரினங்களுக்கும் விஞ்ஞானப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

அவ்வாறு பெயரைச் சூட்டுவதற்கு உலகிலிருந்து மறைந்த மொழியான இலத்தீன் மொழியையே பயன்படுத்தியுள்ளனர். அவை பற்றிய தகவல்கள் இதோ,



# உயிரினங்களுக்கு பெ



### அரிஸ்டோட்டல் உயிரினங்களை வகைப்படுத்தியமை

கி.மு 384-322 ஆம் காலகட்டத்தில் வாழ்ந்த தத்துவஞானியான அரிஸ்டோட்டலால் முதன்முதலாக உயிரினங்கள் வகைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். எனினும்,இவரால் உயிரினங்களின் கட்டமைப்பு மற்றும் அவற்றின் செயற்பாடுகளின் படி உருவாக்கப்பட்ட வகைப்படுத்தலானது, போதியளவு முறையானதாக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகைப்படுத்தல் மூலம் உயிரினங்கள், விலங்குகள் என இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து விலங்குகள் பயணிக்கும் முறையின் அடிப்படையில் தரையில் நடப்பவை, நீரில் நீந்துபவை, வானில் பறப்பவை என மூவகையாகப் பிரிக்கப்பட்டது. இவற்றில், பறவைகள் அல்லாத வெளவால்களும் வண்ணாத்துப் பூச்சிளையும் பறவைகள் என வகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, கி.மு 370-289 காலப்பகுதியில் வாழ்ந்த தியோஃப்ரேஸ்டஸி என்பவரினால் (Theophrastus) தாவரங்கள் மூவகையாகப் பிரிக்கப்பட்டன. அவை செடி, புதர், மரம் என்பனவாகும். இந்த வகைப்படுத்தலானது, பிற்காலத்தில் வகைப்படுத்தும் விஞ்ஞானமாக கருதப்பட்டதோடு, பின்னர் உயிரினங்களை இனங்காணும் முறையான வகைப்படுத்தல் (Systematics), பெயர் சூட்டல் (Nomenclature) என பிரிவுகளாக முன் வைக்கப்பட்டன.



### செயற்கையான மற்றும் இயற்கையான வகைப்படுத்தல்கள்

செயற்கை மற்றும் இயற்கை அடிப்படையில் உயிரினங்களை மற்றொரு முறையில் வகைப்படுத்தலாம்.



இதன்படி, அக்கால சீனர்கள் தாவரங்களை நச்சுத் தாவரங்கள், உண்ணக்கூடிய தாவரங்கள் என இருவகைப்படுத்தினர். அத்தோடு, விலங்குகளை பறக்கக்கூடிய, பறக்க முடியாதவை என வகைப்படுத்தியுள்ளனர்.

இயற்கை வகைப்படுத்தலின் போது, வெளியே தெரியாத மிகவும் ஆழ்ந்த விடயங்களை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. உதாரணமாக, உடல் அமைப்பு, நடத்தை, உடலினுள் நிகழும் செயற்பாடுகள் போன்றவைகள் கவனத்தில் எடுக்கப்பட்டன. இந்த வகைப்படுத்தலே உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### லீனியஸின் வகைப்படுத்தல்

கி.பி 1707- 1778 வரை வாழ்ந்த சுவீடன் நாட்டவரான காலொஸ் லீனியஸினால் (Carlous Linnaeus) உயிரினங்கள் இரு வகை இராச்சியங்களாக வகைப்படுத்தப்பட்டது. அவையாவன தாவர இராச்சியம் (Plantea), விலங்கு இராச்சியம் (Animalia) ஆகும். மேலும் அனைத்து உயிரினங்களும் பல்வேறு


கால்ஸ் லீனியஸ்


அரிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யர் சூட்டப்பட்ட விதம்

| பொதுப் பெயர் | விஞ்ஞானப் பெயர் | |
|---|---|---|
| | கணப்பெயர் | விசேட பெயர் |
| மனிதன் | Homo | Sapiens |
| கிளையில்லாத் தாவரம் | Cycas | Circinalis |
| மூலிகைத் தாவரம் | Cassia | fistula |

உயிர்க் கணங்களாகவும் (Genera), உயிர் இனம் (Species) என்ற அடிப்படையில் வகைப் படுத்தப்பட்டன. இந்த உயிர் கணத்தில் பல உயிர் இனங்கள் அடங்கியிருந்தன. லீனியஸ் இந்த உயிர் கண விசேட பெயர்களைப் பயன்படுத்தி உயிரினங்களை அழைப்ப தற்கு Binomial முறையிலான பெயர் சூட்டலை முன்வைத் தார்.

## பெயர் சூட்டும் வரலாற்றில் ஒரு துளி

**1866**இல் எர்னஸ்ட் ஹேக் கலினால் (Earnest Haecel) மூன்று இராச்சியங்கள் அறிமுகப்படுத்தப் பட்டன.


அவை தாவர இராச்சியம், விலங்கு இராச்சியம், என்பவற்றிற்கு மேலதிகமாக தெளிவாக இனங்காட்டாத மிகவும் சிறிய நுண்ணங்கிகளை ப்ரோடிஸ்டா (Protists) என அழைத்தார்.

மேலும் **1937** இல் எட்வட் செட்டனினால் (Edward chatton) ப்ரோகெரியோட்டா (Prokaryota) மற்றும் கியுகெரியோட்டா (Eukaryota)






...டோட்டல்



எர்னஸ்ட் ஹேக்கல்



ஹர்பட் கோப்லிண்ட்

என உயிரினங்கள் இரு இராச்சியங்களாக வகைப்படுத்தப்பட்டன. அதனை தொடர்ந்து, **1938** இல் ஹர்பட் கோப்லண்ட் (Herbert copeland) குழுவினரால் உயிரினங்களை நான்கு இராச்சியங்களாகப் பிரித்தனர். அவை மொனெரா (Monera), ப்ரோடிஸ்டா (Protista), விலங்கு (Aniamalia) மற்றும் தாவரம் (Plantae) என்பவனவாகும்.

**1969** இல் ரொபட் விட்டேகரினால் (Whittaker) பங்கஸ் (Fungi) எனும் ஒரு இராச்சியத்தை கண்டுபிடித்ததுடன், ஹர்பட் கோப்லண்டனால் வகைப்படுத்திய நான்கு இராச்சியங்களோடு மேலதிகமாக அறிமுகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. **1977** இல் வுஸினால் (Woese) ஆறு இராச்சியங்களாக வகைப்படுத் தப்பட்ட பின்னர் அவற்றை பேரிராச்சியங்கள் என (Domains) **1990** இல் அவராலேயே மூன்றாக வகைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## உயிரினங்களை ஏன் வகைப்படுத்துகின்றனர்

உயிரினங்களை வகைப்படுத்துவதால் அவற்றின் லட்சணம், செயற்பாடுகள் குறித்து ஓர் ஒழுங்கு முறையான கணிப்பீட்டை மேற்கொள்ள இலகுவாக இருக்கும். அத்தோடு, உயிரினங் களை ஒப்பிட்டு வேறுபடுத்திப் பார்க்கவும் இலகுவாக இருக்கும் என்பதால் உயிரினங்களை வகைப்படுத்தியுள்ளார்கள். **(அ)**

<table>
<tr><th>காலொஸ் லினெயஸ் இராச்சியம் - 2</th><th>ஏர்னஸ்ட் ஹேக்கல் இராச்சியம் - 3</th><th>எட்வட் செட்டன் இராச்சியம் - 2</th><th>ஹர்பட் கோப்லண்ட் இராச்சியம் - 4</th><th>விட்டகர் இராச்சியம் 5</th><th>வுஸ் இராச்சியம் 6</th><th>வுஸ் பேரிராச்சியம் 3</th></tr>
<tr><td rowspan="4"></td><td rowspan="4">ப்ரோடிஸ்டா</td><td rowspan="2">ப்ரோ கெரியோட்டா</td><td rowspan="2">மொனரா</td><td rowspan="2">மொனரா</td><td>இயு பற்றீரியா</td><td>பற்றீரியா</td></tr>
<tr><td>ஆகியோ பற்றீரியா</td><td>ஆகியா</td></tr>
<tr><td rowspan="4">இயு கெரியோட்டா</td><td rowspan="2">ப்ரோடிஸ்டா</td><td>ப்ரோடிஸ்டா</td><td>ப்ரோடிஸ்டா</td><td rowspan="4">கியுகெரியா</td></tr>
<tr><td>ஃபங்கை</td><td>ஃபங்கை</td></tr>
<tr><td>வெஜிடாபிலியா</td><td>ப்ளாண்டே</td><td>ப்ளான்டே</td><td>ப்ளான்டே</td><td>ப்ளான்டே</td></tr>
<tr><td>எனிமாலியா</td><td>எனிமாலியா</td><td>எனிமாலியா</td><td>எனிமாலியா</td><td>எனிமாலியா</td></tr>
</table>

# தெரிந்து கொள்வோம்



★ மியன்மாரில் 50 வருடங்களின் பின்னர் ஜனநாயக முறைப்படி தெரிவாகியுள்ள புதிய ஜனாதிபதி யார்?

டின் ஹாயோ



★ பொதுநலவாய நாடுகளின் அமைப்பில் புதிய செயலாளர் நாயகமாக தெரிவுசெய்யப்பட்டவர் யார்? அவர் எந்த நாட்டவர்?

பரோன் பெற்றீசியா - ஸ்கொட்லாண்ட் நாட்டவர்

★ A B C, B B C, C B C எனும் வானொலி நிலையங்கள் முறையே எந்த நாடுகளிலிருந்து ஒலிபரப்பாகின்றன?

i. அவுஸ்திரேலியா

ii. பிரித்தானியா iii. கனடா

★ ISIS அமைப்பினர் அண்மையில் ஐரோப்பாவில் எந்த பிரதான தலைநகரங்களில் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டனர்?

i. பெல்ஜியத்தின் தலைநகர் - பிரசல்ஸ்

i. பிரான்சின் தலைநகர் - பாரிஸ்



★ ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அண்மையில் கரிபீயன் நாடு ஒன்றுக்கு விஜயத்தை மேற்கொண்டார். அந்த நாடு எது? இந்த விஜயத்தின் முக்கியத்துவம் என்ன?

கியுபா, 1959 ஆம் ஆண்டுகளின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் முதல் விஜயமாகும்

★ பின்வரும் நூல்களின் ஆசிரியர்கள் யார்?

i. மணோன்மணியம் - சுந்தரம்பிள்ளை
ii. ஆத்திசூடி - ஔவையார்
iii. தேம்பாவனி - வீரமாமுனிவர்
iv. மூலதனம் - கால்மாக்ஸ்

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-II)

பெயர்: ..................................................

01) இங்குள்ள பந்தியை வாசித்து, அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

டெங்கு காய்ச்சல் வீட்டுக்கு வீடு பீதியை பரப்புகிறது. கொழும்பில் மட்டுமன்றி, ஏனைய பிரதேசங்களிலும் டெங்கு பரவுகிறது. நுளம்புகளை விரட்டுவதற்கும் அழித்து ஒழிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாதுகாப்பதற்காகவும் அவர்கள் நலனுக்காகவும் பல்வேறு பாதுகாப்பு முறைகளை கையாள்கின்றனர். மாரிகாலத்துடன் டெங்கு நுளம்புகள் தொழிற்படத் தொடங்குகின்றன. டெங்கு ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. இங்கு வீட்டுக்கு வீடு என்பதனால் கருதப்படுவது யாது?
   ..................................................
2. டெங்கு பரவுவதற்கு உதவும் இயற்கை இயல்பு யாது?
   ..................................................
3. பின்வரும் சொற்களுக்கு ஒத்தசொல் தருக.
   1. பீதி: ..........................................
   2. காலம்: ......................................
4. பந்தியிலுள்ள உயர்திணைப் படர்க்கை பன்மை எழுவாய்ச் சொல் யாது?
   ..................................................
5. மாரிகாலம் என்பதன் பொருள் யாது?
   ..................................................

02) அடைப்பில் உள்ள எழுத்துக்களில் பொருத்தமான எழுத்தைத் தெரிவுசெய்து சொற்களைப் பூர்த்தி செய்க.

| ரு, று, ண, லை, ல், ள், ழு |
|---|

1. ப.....க்காரன்   2. வே.....க்காரன்
3. வாழ்த்து மட.....   4. ஒ.....க்கம்
5. தி.....மணம்

03) பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை தருக.

1. மா, பலா, வாழை என்பன -.................................
2. சூரியனைச் சூழ உள்ள ஒளி வட்டம் -.........................

04) பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரினதும் கருத்தை எழுதுக.

1. வயிற்றெரிச்சல் : ..........................................
2. முகம் மலர்தல் : ..........................................

05) ஆங்கில வாக்கியத்துக்குரிய கருத்தை தமிழில் எழுதுக.


1. I want to play football - ..................................
2. I am a good player - ..................................




06) பின்வரும் சிங்கள வாக்கியங்களுக்குரிய கருத்தினை தமிழில் தருக.

1. ஔயா சிந்து அஹன்ன: ..........................................
2. அஹச நில் பாட்டய்: ..........................................

07) வரைபைப் பயன்படுத்தி கீழ்காணும் வினாக்களுக்கு சரியான விடை தருக.




1. வீட்டிலிருந்து பாடசாலை வழியாக வைத்தியசாலைக்குள்ள தூரம் யாது?
   ..................................................
2. பாடசாலையிலிருந்து வைத்தியசாலையூடாக சந்தைக்குள்ள தூரம் யாது?
   ..................................................
3. பாடசாலையில் இருந்து வீட்டுக்குள்ள தூரம் எத்தனை m ஆகும்?
   ..................................................
4. வீட்டிலிருந்து வைத்தியசாலையூடாக சந்தைக்குள்ள தூரம் யாது?
   ..................................................
5. வீட்டிற்கு மிக அருகில் இருப்பது பாடசாலையா? வைத்தியசாலையா?
   ..................................................

**(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)**

### முன்னோடி வினாப்பத்திரம் (பகுதி-I)

(மே 18 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 05. 2 | 09. 3 | 13. 1 |
| 02. 3 | 06. 1 | 10. 2 | 14. 2 |
| 03. 3 | 07. 1 | 11. 3 | 15. 1 |
| 04. 1 | 08. 3 | 12. 1 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால நிலையில் வானொலி ஒலிபரப்புக்கள்







ஊடக பாடநெறி பாகம்-II

பாடம் – 105

அவசரகால நிலையின்போது, அரச ஒலிபரப்புக்கள் இயக்கப்படும் சூழல் மாறுபட்ட அனுபவங்களை நேயர்களுக்குத் தரவல்லது. அதாவது, நாட்டில் ஏதேனும் பிரச்சினைகளால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு அரச வானொலி ஒலிபரப்பை நடத்துவதற்கு கடினமான நிலைகள் ஏற்படுவதுண்டு. உதாரணத்திற்கு நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக, ஒலிபரப்பை மேற்கொள்வதற்கு தேவையான அளவில் அறிவிப்பாளர்களோ, தொழிநுட்பவியலாளர்களோ, இதர ஊழியர்களோ இல்லாத நிலை ஏற்படலாம். இவ்வாறான அசாதாரண சூழ்நிலைகள் ஏற்படும்போது அவசரகாலநிலையை அமுல்படுத்தும் கட்டாயம் ஏற்படும்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் குறிப்பாக, அரச வானொலி நிலையங்களில் கடமையாற்றுபவர்கள் கடமைக்கு சமூகம் தரமுடியாத நிலை காரணமாக முப்படையினரின் உதவி கோரப்படும். இதன்படி, நாட்டின் அவசர தேவைக்கு பயன்படுத்தக் கூடியவாறு முப்படையினரில் சிலருக்கு ஏற்கனவே ஒவ்வொரு துறையிலும் பயிற்றுவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.





அவ்வாறானவர்களைக் கொண்டே வானொலி ஒலிபரப்புக்களும் நடத்தப்படும். இவர்களில் அறிவிப்புத் துறையில் பயிற்றுவிக்கப்பட்டவர்களும் இருப்பர். இவர்களே, அறிவிப்புப் பணிகளை செய்வர். இருப்பினும் இவர்கள் அனுபவ ரீதியில் முழுமை பெறாத நிலையிலேயே இருப்பதனால், நேயர்களுக்கு இவர்களின் அறிவிப்புப் பாணி முழுத் திருப்தியை தராத நிலை இருப்பதுமுண்டு. இருப்பினும், நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவும் சந்தர்ப்பத்தில் வானொலி ஒலிபரப்பானது, செயலிழந்துவிடுவது அந்த நாட்டின் இறைமையைப் பாதிக்கும் சம்பவமாகவே கருதப்படும். எனவே தான், இப்படியான சந்தர்ப்பங்களில் ஒலிபரப்பில் தடை ஏற்பட்டு மௌனிப்பு நிலை ஏற்படாதவாறு தொடர்ந்தும் ஒலிபரப்பு நடைபெறுவதற்கு ஏதுவாக முப்படையினரில் பயிற்றுவிக்கப்பட்டவர்களைக் கொண்டு இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, நாட்டில் அசாதாரணமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்க அறிவித்தல்களை அறிவதற்கும் செய்திகளை அறிவதற்கும் மக்கள் வானொலியையே பெரிதும் எதிர்பார்க்கின்ற சூழ்நிலையில் இவ்வாறு அவசரகால நிலை அமுல்படுத்தலின்கீழ் வானொலி ஒலிபரப்புக்களை முன்னெடுப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்துள்ளது.

(தொடரும்)

-ரிஷபன்

## T20 உலகக் கிண்ணப் போட்டி வெற்றியாளர்கள்

ICC WORLD TWENTY20 INDIA 2016

'விஜய்' பத்திரிகையில் T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் ஏராளமான போட்டியாளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர். வெற்றி பெறும் அணி, இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் அணிகள் ஆகியனவற்றை குறிப்பிட்டு அனுப்புமாறு கேட்டிருந்தோம். அநேகமானோர் தவறான கணிப்பையே வெளியிட்டிருந்தனர். சிலர்தான் சரியான கணிப்பை தெரிவித்திருந்தனர். இதில் சரியாக குறிப்பிட்டு அனுப்பியோரில் பரிசில்களைப் பெறுவோரின் விபரங்கள் வருமாறு;



### முதலாம் பரிசு வெல்வோர் (T-Shirt, Tea mug, Cap)

- ★ ஜித்தேஷ் லோகரஞ்சன், 09, 2ஆம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.
- ★ ஆர்.விஷாந்த், 35, தொலஸ்பாகை வீதி, நாவலப்பிட்டி.
- ★ கௌரீசன் பிறையினி, பேராளை, பளை, கிளிநொச்சி.





### இரண்டாம் பரிசை வெல்வோர் (Tea mug, Cap)

- ★ எம்.அமாசிர், நிந்தவூர்-03.
- ★ றுஸ்தாம் அகமட், நிந்தவூர்-04.
- ★ மொஹமட் சிஜாஸ், பாண்டிருப்பு-01.
- ★ எம்.ஹுசைன், குருணாகல்.
- ★ எஸ்.ஷரீஃப், ஹெம்மாத்தகம.
- ★ இனாமுல்லாஹ், அக்குறணை.
- ★ எம்.மொஹமட், வெலிகம.
- ★ எம்.அப்துல்லாஹ்,கெலிஓயா.
- ★ என்.உமைமா, அக்குறணை.
- ★ ரபீத் முஆஸ், கல் எலிய.




### மூன்றாம் பரிசை வெல்வோர் (Cap)

- ★ டி.தஸ்ரிபா, மன்னார்.
- ★ முத்துலிங்கம் பினோசிகன், கோண்டாவில்.
- ★ முபாஸ் அஹமட், கல்பொக்க.
- ★ இஸ்மத், கலேவெல.
- ★ ஜே.பியுலா, கண்டி.
- ★ ஆ.முரளிதரன், இணுவில்.
- ★ பஸ்லுர் ரஹ்மான், கட்டுகஸ்தோட்டை.
- ★ செரோன் பிலிம், கிருலப்பனை.
- ★ க.பூரணி, உரும்பிராய்.
- ★ எம்.இல்ஹாம், மாத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தில் தொழில்நுட்ப மயமாகும் வீடுகள்



விஞ்ஞான தொழில்நுட்பத் துறையில் முன்னேறிய நாடுகளில் தற்போது தொழிநுட்பக் கருவிகள் தானியங்கியாக செயற்படுகின்றன. இவ்வாறான கருவிகள் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.



## கைவிரல் அடையாள வாசிப்பு மானி

இது வீட்டின் கதவருகே பொருத்தக்கூடிய கைவிரல் அடையாள வாசிப்பு மானியாகும் (Finger Print). இதனூடாக திறப்பினைத் திறக்கக்கூடிய நபரின் கைவிரல் அடையாளம் அதாவது, அனுமதி பெற்ற நபரின் கைவிரல் அடையாளம் பரிசோதிக்கப்பட்டு பின்னர் கதவு திறபடும். சிலவேளைகளில் அடையாளத்தினை உறுதிப்படுத்த முடியாதபோது, பிரவேசிப்பவரின் புகைப்படம் பாதுகாப்பு நிலையத்திற்கோ, வீட்டின் உரிமையாளரின் கைத்தொலைபேசிக்கோ அனுப்பப்படும். இதனூடாக வீட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

## வீட்டின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் கருவி!

உங்களது வீட்டில் இந்த தொழில்நுட்பக் கருவி இருக்குமாயின் உங்கள் வீட்டின் வெப்பநிலை எப்பொழுதும் சம அளவில் கட்டுப்பாட்டுடன் இருக்கும். இதனை Sensor Enabled Thermostat என்பர். WiFi தொழில்நுட்பத்துடன் இதனை தொடர்புபடுத்தி இயக்கிக்கொள்ள முடியும். வீட்டின் எந்தவொரு இடத்தில் இருந்தும் இதனைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும். வீட்டின் உரிமையாளர் இல்லாத சந்தர்ப்பத்திலும் சுயமாக இந்த வலையமைப்பில் உள்ள Memory function (நினைவுப் பகுதி) மூலம் அறை வெப்பநிலை கட்டுப்படுத்தப் படுகின்றது. மேலும், அறையின் உள்ளக காற்றோட்டமும் அடிக்கடி சுத்தப்படுத் தப்படுகின்றது.




## சுயமாக இயங்கும் குளிர்சாதனப் பெட்டி



மிகவும் அவசரமான வாழ்க்கை முறைக்கு உதவக்கூடிய முறையில் பல சிறப்பம்சங் களுடன் Self Cleaning Fridge ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதாவது, குளிர்சாதனப் பெட்டியில் இருக் கின்ற ஒவ்வொரு உணவு வகை களின் அளவுகள் குறித்து சுயமாக இனம்காணும் ஆற்றல் இந்த குளிர்சாதனப் பெட்டிக்கு உண்டு.

## தொழில்நுட்ப திறப்பு




வீட்டின் சாவியை மறந்துவிட் டால் அல்லது தொலைத்துவிட்டால் கைத்தொலைபேசியினூடாக வீட்டின் பூட்டினைத் திறந்துகொள்ள முடியும். இதன்மூலம் திறப்பு Digitalize செய்யப் படுகின்றது. இதற்கென Calypso key designs phone cases மற்றும் Near field Technology (NFC) வசதியினைப் பெற வேண்டும். இதற்கு முதலில் வீட்டின் திறப்பினை RFID Supported திறப்பாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதன்மூலம் Key யை பயன்படுத்தி பூட்டினை திறந்துகொள்ள முடியும்.




## விவசாய நிலத்தினைப் பாதுகாக்கும் ரொபோ பறவை

இந்த ரொபோ பறவை விவசாய நிலங்கள் மற்றும் விமான நிலையப் பகுதிகளுக்குள் பிரவேசிக்கும் பறவைகளை விரட்டியடிக்கும் திறன் வாய்ந்தது. இந்த பறவைகள் இரண்டு வகைப்படும். கழுகு, பருந்து போன்ற தோற்றங்கள் கொண்ட தொலைதூர இயக்கி (ரிமோட் கன்ட்ரோல்) மூலம் இயக்கக்கூடியது. இவை பார்வைக்கு உண்மையான பறவைகள் போன்றது. இதனால் நிஜமான பறவைகளை விரட்டி அடிக்கும் ஆற்றல் காணப்படுகின்றது. கழுகுப் பறவையின் நீளம் 23 அங்குலமாகும். சிறகுகளுக்கு இடையிலான நீளம் 47 அங்குலம். மணித்தியாலத்திற்கு 80 கி.மீற்றர் வேகத்தில் பறக்கும் ஆற்றல் கொண்டது.

பருந்து வடிவ பறவையின் நீளம் 46 அங்குலம். சிறகுகளுக்கிடையிலான நீளம் 86 அங்குலமாகும். எதிர்வரும் காலங்களில் தானியங்கி முறையில் செயற்படக்கூடிய வகையில் இந்த ரொபோ கருவியினைத் தயாரிப்பதற்கு உற்பத்தியாளர்கள் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்





இலங்கையில் தற்போது நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக, பல்வேறு பகுதிகளிலும் அடைமழை பெய்து வருகின்றது. இதனால் மக்கள் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புற்று பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, இத்தகைய அனர்த்த நிலைமைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான சில வழிமுறைகளை உங்களுக்காக வழங்குகின்றோம்.


## மண்சரிவிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கு...

புவி மேற்பரப்பு மண்படையானது, உயர் பிரதேசத்திலிருந்து பள்ளத்தை நோக்கி நகர்வதே மண்சரிவு எனப்படுகின்றது. நிலத்தின் அடிப்பகுதியில் நீர் தேங்கி வெடிக்கும்போதே, மண்சரிவு ஏற்படுகின்றது. மழைக்காலங்களிலேயே மண் சரிவு அபாயங்கள் அதிகம் நிகழ்கின்றன. மழையோடு மண்திட்டு கீழ்நோக்கி சரிந்து செல்லும்போது, அதனுடன் தொடர்புடைய மரங்கள், கற்பாறைகள், கற்கள் என்பனவும் புரண்டு செல்லும்.

குறித்த ஒரு பகுதியில் கட்டடங்களின் சுவர்களில் வெடிப்பு ஏற்படுதல், திடீர் நீர் ஊற்றுக்கள் வெளிப்படுதல், மலைச்சரிவுகளில் உள்ள மரங்கள் மற்றும் தொலைபேசி - மின் கம்பங்கள் சரிதல் அல்லது உறுதியற்று ஆடுதல், பாதைகளிலும் தரைகளிலும் பிளவுகள் ஏற்படல், மலைச் சரிவுகளில் உள்ள தாவரங்கள் திடீரென இறத்தல், மிருகங்களின் நடமாட்டத்தில் மாற்றம் போன்ற அறிகுறிதென்பட்டால், அப்பிரதேசங்களில் இருந்து உடனடியாக வெளியேறிவிட வேண்டும். மேலும், ஏதேனுமோர் இடத்தில் மண்சரிவு ஏற்பட்டால், ஏனைய பிரதேச மக்கள் அந்த இடத்தை பார்வையிடச் செல்லவோ, அப்பகுதிகளுடாகப் பயணிக்கவோ கூடாது.

## வெள்ளப்பெருக்கிலிருந்து பாதுகாத்துக்கொள்ள...

அதிக மழை காரணமாக, ஆற்றுநீர் பெருக்கெடுப்பு, மழைநீர் சரியான முறையில் வழிந்தோடாமை, நீரேந்துப் பகுதியில் ஏற்படும் அணை வெடிப்பு போன்ற காரணங்களினால் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம். வெள்ள அபாயம் ஏற்படப் போவதாகதென்பட்டால், துரிதகதியில் பாதுகாப்பான இடத்தை நோக்கிச் சென்று விடுங்கள். வெள்ளத்தின்போது; ஆற்றில் நீச்சல் அடித்தல், நீர் சார்ந்த விளையாட்டுகளில் ஈடுபடல், உடைந்து விழுந்திருக்கும் மின்கம்பங்களின் அருகில் செல்லல், வெள்ள அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நடமாடுதல், வெள்ள நீரினால் மூடப்பட்டிருக்கும் கிணறுகள் மற்றும் ஆழமான குழிகள் உள்ள பகுதிகளுக்குச் செல்லல் என்பனவற்றை தவிர்த்து விடுங்கள். வெள்ள நீர் வீட்டிற்குள் புகுந்தால் வீட்டின் கதவு, ஜன்னல்களைத் திறந்துவிடுவதுடன், மின் விநியோகத்தையும் துண்டித்துவிடுங்கள்.




உங்கள் அபிமான

தமிழ்Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

விலை Rs. 10/=

தினசரி தேசிய பத்திரிகையாக வெளிவருகிறது

wijeyanewspapers helping shape opinions | the SUNDAY TIMES | விஜய் | DailyMirror | தமிழ்Mirror www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கடவுள்கள், இயற்கையிலும் மனித வாழ்க்கையிலும் பெரும்
கடவுள்கள் என்போர் மனிதனைவிட உயர்ந்த தோற்றம் கொண்
கருதினர். எனவே, ஒவ்வொரு சக்திக்கும் இயற்கையின் அற்ப
தேவ சபையொன்றை தாபித்தனர். கிரேக்கத்தில் உள்ள ஒலிம்
கிரேக்கர்கள் நம்பினர்.


பண்டைய கால கிரேக்கர்கள் இந்த கடவுள்களுக்காக அழகி
கிரேக்கம் முழுவதும் இன்றும்கூட நாம் காணலாம். அத்துடன்
பண்டைய கிரேக்கர்கள் வழிபட்டு வந்த பிரதான கடவுள்கள் ப

# கிரேக்க கடவுள்

## தேவ சபையின் பிரதான கடவுள்கள்

* சியுஸ் - தேவ சபையின் தலைமைப் பதவியை வகிக்கும் கடவுள்
* எத்தீனா - அறிவின் தேவதை
* எப்ரோடைட் - அன்பின் தேவதை
* அப்பலோ - ஒளி, சங்கீதம், சுகம் வழங்கும் கடவுள்
* எரஸ் - யுத்தத்திற்கு அதிபதியாகத் திகழும் கடவுள்
* பொசெய்டன் - கடலுக்கு அதிபதியான கடவுள்
* ஆர்டெமிஸ் - விலங்குகளின் தேவதை
* ஹேரா - தாய்மார்களின் தேவதை
* ஹர்மீஸ் - சுற்றுலாவுக்கு அதிபதியாகத் திகழும் கடவுள்
* ஹீப் - பிள்ளைகளுக்கான தேவதை
* ஹெபாய்ஸ்டஸ் - நெருப்புக்குரிய கடவுள், பாதாளத்தின் கடவுள்
* டெமெட்டர் - முதிர்ந்த தானியங்களின் தேவதை
* பர்செபோன் - தாவரங்களின் செழுமைக்குரிய தேவதை
* தியோனீசஸ் - திராட்சை ரச தேவதை
* ஹேடீஸ் - மரித்தோரின் கடவுள்

### சியுஸ் (ரோமானியப் பெயர் - ஜுபிடர், ஜோவ்)



கிரேக்க தேவ சபையின் தலைவராகிய சியுஸ் கடவுள், இடி - மின்னலுக்கும் வானுக்கும் அதிபதியாவார். காலநிலையை நிர்வகித்ததும் இந்தக் கடவுளே. ஏதேனு மொரு நிலையில் இக்கடவு ளின் வெறுப்பை சம்பாதித் தால், குறித்த நபர் மீது இடி விழச் செய்வார் என்றும் வளி மற்றும் ஆகாயம் சம்பந்தப்பட்ட சகல இயற்கை நிகழ்வுகளை யும் இவரே கட்டுப்படுத்து கிறார் என்றும் மக்கள் கருதினர். அக்கால கிரேக்கர்கள் இடி விழும் சந்தர்ப்பங்களை சியுஸ் கடவுளின் வருகை யின் குறியீடாகவே கருதினர்.

### எப்ரோடைட் (ரோமானியப் பெயர் - வீனஸ்)



அன்பிற்கு, அழகிற்கு, ஆசைக்கு தலைமை வகிக்கும் தேவதை. புறா, பறவைகள், தேனீ, அப்பிள், அன்னம், ரோஜாப்பூ என்பனவற்றை இவரது குறியீடாக கருதப்பட்டது. எப்ரோடைட் கடவுள் பேரழகுமிக்கவர்.

### அப்பலோ - (ரோமானியப் பெயர் - அப்பலோ)



சூரியன், உண்மை, சங்கீதம், கவிதை, ஆடல், ஆரோக்கியம் என்பனவற் றுக்கு தலைவனாக அப்பலோ கடவுள் கருதப்பட்டார். நான்கு குதிரைகள் பூட்டப் பட்ட வாகனத்தை செலுத் துவது அப்பலோ கடவுளின் நாளாந்த- முக்கிய கடமை யாக இருந்தது.எதிர்கா லத்தை தீர்க்கதரிசனமாகக் காணக்கூடிய கடவுளாகவும் அப்பலோ கருதப்பட்டார்.

### எத்தீனா (ரோமானியப் பெயர் - மினர்வா)



அறிவிற்குப் பிரதானியாக எத்தீனா தேவதை கருதப் பட்டார். மட்பாண்டங்களை தயாரிப்பதற்கும் கம்பளி நெய்வதற்கும் தலைவி யாக ஏற்றுக்கொள்ளப்பட் டார். நகரங்களுடன் சம்பந் தப்பட்ட தேவதையாக கருதப்பட இவருக்காக கட்டியெழுப்பப்பட்ட வழிபாட்டுத் தலங்களை கிரேக்கத்தின் எல்லா நகரங் களிலும் காணக்கூடியதாக இருந்தது. கிரேக்கத்தின் எதென்ஸ் நகரைப் பாதுகாத்ததும் எத்தீனா என்றே கூறப்படுகின்றது. போருக்குப் பயன்படுத் தும் தேர், கடிவாளம் என்பனவற்றை கண்டு பிடித்ததும் முதலாவது கப்பலை உருவாக்கியதும் இவர் என்றே கூறப்படுகின்றது.

### ஹேரா (ரோமானியப் பெயர் - ஜுனோ)



சியுஸ் கடவுளின் சகோதரியும் மனைவி யுமாவார். திருமணத் தின் பாதுகாவலராக செயல்படும் ஹேரா, திருமணம் முடித்த அனைத்து பெண்களினதும் பாதுகாவலராக செயல்பட்டார். பசுவும் மயிலும் ஹேரா கடவுளுக் கென்று ஒதுக்கப் பட்ட உயிரினங் களாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY



ரும் தாக்கத்தை செலுத்துவதாக பண்டைய கிரேக்கர்கள் நம்பினர். மேலும், ாண்டவர்கள் என்றும் நோய் நொடிகளுக்கு உட்படாதவர்கள் என்றும் அவர்கள் அற்புத நிகழ்வுகளுக்குமென அவர்கள் ஒவ்வொரு கடவுளையும் குறிப்பிட்டு, லிம்பஸ் மலை உச்சியின் மேகங்களுக்கிடையில் இந்த கடவுள்கள் இருப்பதாக

ழகிய - அலங்காரம் நிறைந்த பல தேவாலயங்களைக் கட்டினர். அவற்றை டன், கடவுள்களுடன் தொடர்புடைய பல வாய்மொழிக் கதைகளும் உள்ளன. ள் பற்றிய சிறு தகவல்களை அறிந்துகொள்வோம்.



# ள்கள் பற்றிய தகவல்கள்



## ஆர்டெமிஸ் (ரோமானியப் பெயர் - டயனா)



வேட்டைக்கு, சந்திரனுக்கு, இயற்கைச் சூழலுக்கு தலைவி இவராவார். வனஜீவிகளும் செல்லப்பிராணிகளும் இவரின் பாதுகாப்பை குறைவின்றிப் பெற்றன. விவசாயத்திற்கும் விலங்கு வேளாண்மைக்கும் தேவதையாகத் திகழ்ந்தார்.

## டெமெட்டர் (ரோமானியப் பெயர் - சிரிஸ்)



டெமெட்டர் கடவுள், அறுவடைக்கும் தானியங்களுக்கும் பூமியின் இயக்கத்திற்கும் தலைவியாவார். புனிதச் சட்டங்களுக்கும் வாழ்க்கை மற்றும் மரணச் சக்கரங்களுக்கும் இவரே தலைவி. பொப்பி, தானியம், ஒளி, விளக்கு, பன்றி என்பன இக்கடவுளின் குறியீடுகளாகும்.



-ஜெயகர்





## ஹர்மீஸ் (ரோமானியப் பெயர் - மேர்கரி)

கடவுள்களின் தூதுவராக கருதப்படுகிறார். கடவுள்கள் மற்றும் மக்கள் வாழும் உலகத்திற்கிடையே மிக வேகமாக பயணிக்கக்கூடியவர். கால்களில் பொருத்தப்பட்டுள்ள பறவைகளின் சிறகுகள் காரணமாக, ஏனைய கடவுளரைவிட, மிக வேகமாக இவரால் பயணிக்க முடியும் எனக் கூறப்படுகின்றது. மனிதர்களுக்கும் கடவுளுக்கும் இடையே செய்தி பரிமாறுபவரும் இவரே. சொர்க்கம், பூவுலகம், நரகம் என மூவுலகிற்கும் பயணிக்கும் அனுமதியை பெற்றிருந்த ஒரே ஒலிம்பிய கடவுள். இதனாலேயே சுற்றுலாவுக்கான கடவுள் என இவர் அடையாளப்படுத்தப்படுகின்றார். பாதாளத்தின் காவலாளி எனவும் இவர் அழைக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணு மாற்றம் பெற்ற மலைவாழ் மக்கள்



தனது குழந்தையுடன் காணப்படும் திபெத்திய பெண்ணொருவர்



கண்டுபிடிக்கப்பட்ட பல்லொன்று




எவரெஸ்ட் மலைச் சிகரத்தை சென்றடைவதற்காக உலகின் பல பகுதிகளிலிருந்தும் வருகின்றவர்களுக்கு இமயமலைப் பிரதேசத்தில் வாழும் ஷெர்பா இன மக்களும் திபெத்தியர்களுமே வழிகாட்டுகின்றனர். இப்பிரதேசத்தின் பௌதிக அமைப்பும் காலநிலையும் அங்கு மக்கள் உயிர் வாழ்வதற்கு மிகவும் சிரமமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக இருந்தாலும், அழிந்துபோன மனித சமூகமொன்றில் மரபணு மாதிரிகள், இந்த மலைப்பிரதேசத்தில் மக்கள் உயிர் வாழ்வதற்கான ஆற்றலை அளித்துள்ளதென புதிய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.
நவீன மனிதன் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்தே உலகெங்கும் பரவினான். அப்பொழுது புதிய பிரதேசங்களில் புதிய காலநிலைக்கும் பல்வேறு சூழ்நிலைகளுக்கும் இசைவாக்கம் அடைய வேண்டிய தேவை நவீன மனிதனுக்கு ஏற்பட்டது. அதற்கமைய, ஒரு மனித சமுதாயம் மற்றுமொரு மனித சமுதாயத்துடன் கலந்ததனாலேயே



குகையில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள்

இந்த மரபணு மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு, மேலும் பல்வேறு காலநிலை மற்றும் சூழல் நிலைகளுக்கு இசைவாக்கம் அடைந்து உலகம் முழுவதும் பரவுவதற்கும் அது வழியமைத்துள்ளது.

## மாற்றமடைந்த மரபணு மாதிரி

மாற்றமடைந்த மரபணு மாதிரி காரணமாக, மலைப்பிரதேசத்தில் வாழ்பவர்களின் குருதியில் உள்ள ஹீமோக்லோபினின் விகிதம் குறைவாக இருக்கும். ஹீமோக்லோபின் என்பது உடல் முழுவதும் ஒட்சிசனை காவிச் செல்லும் ஒரு புரதமாகும். பொதுவாக, அதி உயர் பிரதேசத்திற்கு வந்தவுடன் குருதியில் ஹீமோக்லோபினின் அளவு அதிகரிக்கும். எனினும், திபெத்திய மற்றும் ஷெர்பா மக்களின் குருதியில் ஹீமோக்லோபினின் அளவு ஓரளவுக்கே அதிகரிக்கின்றது.

எனவே, திபெத்திய மக்களுக்கும் ஷெர்பா மக்களுக்கும் கிடைத்துள்ள இந்த அற்புதமான இசைவாக்கம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் ஏதாவதொரு சூழலுக்கு இசைவாக்கம் அடைந்த மானிட சமூகத்திற்கு உரித்தான மரபணு மாற்றமே இதற்கு காரணமாகும் என கண்டறிந்தனர். அதன்படி பார்த்தால், டெனிசொவான்களின் மரபணு மாற்றத்துக்கமையவே திபெத்திய மக்களினதும் ஷெர்பா மக்களினதும் மூதாதையர்கள் இசைவாக்கம் அடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## டெனிசோவா குகை

டெனிசொவான்கள் குறித்து முதலாவது ஆய்வு 2008 ஆம் ஆண்டு டெனிசொவா குகையில் மேற்கொள்ளப்பட்டது. நியோலிதிக் மானிடர்களும் துருக்கிய இடையர்களும் இங்கு வாழ்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.
டெனிசொவா குகையில் அகழ்வாராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த அலெக்ஸாண்டர் சிபென்கோ எனும் ரஷ்ய தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளர் சிறியதோர் எலும்புத் துண்டொன்றைக் கண்டுபிடித்தார். அந்த எலும்புத்துண்டு தொடர்பில் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர், அந்த எலும்பு கண்டுபிடிக்கப்பட்ட பகுதியிலேயே மேலும் இரு பற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றின் மரபணுக்கள் அந்த எலும்புத் துண்டிற்கு சமனானது என்றும் அதனால், இவை ஒரே மானிட வர்க்கத்திற்குரியவை என்றும் உறுதிசெய்யப்பட்டது.


## மரபணு வெளிப்பாடு

டெனிசொவான் புதைபடிமங்களில் இருந்து பெறப்பட்ட மரபணு குறித்து மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின்படி, நவீன மானிடனின் மூதாதையர்கள் சைபீரியாவில் இருந்து ஒஷியானியாவின் பசுபிக் தீவுகள் வரையான வலயத்தில் பரவிச் சென்ற மரபணு மாற்றத்துடன்கூடிய டெனிசொவான்கள் ஆவர் என கண்டறியப்பட்டுள்ளது. அதி உயர் பிரதேசங்களில் வாழ்வதற்கேற்ற விதத்தில் இசைவக்கம் அடைந்துள்ள ஏனைய ஆசிய மக்களிடமும் இந்த மரபணு மாதிரிகள் இருந்திருக்கலாம் என ஆய்வாளர்கள் அனுமானிக்கின்றனர். அத்துடன், இமய மலைப் பிரதேசத்தில் வாழும் ஷெர்பாக்களிலும் மொங்கோலியர்களிலும் திபெத்தியர்களிலும் குறிப்பிடத்தக்க விகிதத்தில் இந்த மரபணு மாதிரிகள் கலந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.




டெனிசொவா குகையில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புத்துண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிபாடும் திறமையால் விருது பெற்ற கவிஞர்!

இந்தியாவில் பாரத ரத்னா, பத்ம விபூஷண விருதுகளுக்கு அடுத்த படியாக மிகவும் போற்றத்தக்க விருதாக பத்ம ஸ்ரீ விருது கருதப்படுகின்றது. இந்திய அரசினால் ஆண்டுதோறும் பல துறைகளில் சாதனை படைத்தவர்களுக்காக இந்த விருது இந்திய குடியரசுத் தலைவரினால் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றது. இந்த நிகழ்வு இந்திய குடியரசு தினத்தினை முன்னிட்டு நடைபெறுவதுண்டு. கடந்த குடியரசு தினத்தில் ஒரிஸா பிராந்தியத்தினை சேர்ந்த கவிஞரான ஹல்தார் நாக் என்பவர் இலக்கியத்திற்கு செய்த பணிக்காக பத்ம ஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஹல்தார் நாக்

ஒரிஸா மாநிலத்தைச் சேர்ந்த 66 வயதான ஹல்தார் நாக் தம்மால் புனையப்பட்ட கவிதைகளை மனப்பாடமாக நினைவில் வைத்துள்ளார். இவரது கவி வரிகளை அந்நாட்டுப் புலமையாளர்கள் பலர் அவர்களின் கலாநிதி பட்டத்திற்காகப் பயன்படுத்தியுள்ளனர். சம்பல்பூர் பல்கலைக்கழகம் இவரின் கவி வரிகளை தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளது. 'ஹல்தார் கிரன்ந்தபாலி' என்ற அந்த நூல் தற்போது பல்கலைக் கழகத்தின் பாடங்களில் சேர்க்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## புலமையாளர்களின் பாராட்டுக்கள்

கிராமத்தில் வாழ்பவராகவும் மிகவும் எளிமையான வாழ்க்கை முறையினைக் கொண்டவருமான இவர் தமது வாழ்க்கைப் பயணத்தினை பாடசாலை ஒன்றில் சமையல் செய்பவராகவே ஆரம்பித்துள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்பு தமது மனதில் கவி வரிகளை அவர் படைத்துள்ளார். போதிய எழுத்தறிவு இல்லாமையால் அவரால் எழுத்து வடிவில் தமது கவிதைகளைப் புனைய முடியவில்லை. இருப்பினும் அவரின் கவித்திறன் எந்த நூலையும் தழுவாமல் சுயமாகப் படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கடன் வாங்கிய கதை

"நான் வங்கிக் கடன் மூலம் பாடசாலை உபகரணங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றினை நடாத்தி வந்தேன். அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில்தான் நான் வாழ்ந்து வருகின்றேன்" என்று பத்ம ஸ்ரீ விருது கிடைத்த பின்னர் 'டைம்ஸ் ஒஃப் இந்தியா' பத்திரிகைக்கு அவர் தெரிவித்துள்ளார். அவர் தனது தாய்மொழியான கொசலி மொழியில் தனது முதல் கவி வரிகளை 1990 ஆம் ஆண்டு எழுதினார். அதன் தலைப்பு 'தோடே ா பார்கச்' (முத்த ஆலமரம்) என்பதாகும். இந்த கவிதை பிராந்திய சஞ்சிகை ஒன்றில் பிரசுரமாகியிருந்தது. அதன் பின்னர் மேலும் நான்கு கவிதைகளை அவர் எழுதி அந்த சஞ்சிகைக்கு அனுப்பி வைத்தார். அவையும் பிரசுரமாகின. அன்று முதல் இலக்கியவாதிகளின் பாராட்டுக்களுக்கு அவர் பாத்திரமானார். அத்தோடு, இளைஞர்களும் யுவதிகளும் அவரின் கவி வரிகளை பெரிதும் விரும்பினர். ஏனெனில், தமது வாழ்க்கை முறையினை அக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றதாக அவர்கள் கருதினர்.





## கோசலி மொழி

ஹல்தார் நாக் 'கொசலி' மொழியில் கவிதைகளை எழுதியதனால் இலக்கிய ரீதியிலான முக்கியத்துவத்தையும் செழுமையையும் இந்த மொழி பெற்றுள்ளது. கொசலி மொழியை சம்பல்பூர் கொசலி என்றும் அழைக்கின்றனர். இது ஒரிஸா மொழியிலிருந்து பிரிந்து வந்த உப மொழியாகும். கிழக்கு இந்தியர்கள் இம்மொழியினையே பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

## கவிஞரின் கருத்து

மிக மிக எளிமையான வாழ்க்கையினை வாழும் நாக் இந்தியாவின் கொசலி இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள பணி அளப்பரியதாகும். இவர் வெந்நிற வேஷ்டியுடன் காலணிகள்கூட அணியாது அண்மையில் இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் தமக்கான பத்ம ஸ்ரீ விருதினைப் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் கவிஞர் நாக் உரையாற்றியபோது, "இளைஞர்கள், முதியவர்கள் அனைவருமே கவிஞர்கள் தான். ஆனால் கவிதையின் வடிவத்தினை மிகச் சிலர் மட்டுமே புரிந்து கொள்கின்றனர்" என்று தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் ராணி-மாலா ஆகியோருக்கு இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

රාණි: මාලා, ඔයා කොහේද යන්නේ?
மாலா, ஒயா கொஹேத யன்னே?
**ராணி: மாலா, நீங்கள் எங்கே போகிறீர்கள்?**

මාලා: මම කොම්පියුටර් පන්තියකට යනවා රාණි.
மம கொம்பியூட்டர் பந்தியகட்ட யனவா ராணி.
**மாலா: நான் கணினி வகுப்புக்குப் போகிறேன் ராணி.**

රාණි: ඔයා කවද ඉඳලද යන්නේ?
ஒயா கவத இந்தலத யன்னே?
**ராணி: நீங்கள் எப்போதிலிருந்து போகிறீர்கள்?**

මාලා: මම ගිය සතියේ බැඳුනේ.
மம கிய சதியே பெந்துனே.
**மாலா: நான் போன கிழமைதான் சேர்ந்தேன்.**

රාණි: කොහේද කොම්පියුටර් පන්තිය තියෙන්නේ?
கொஹேத கொம்பியூட்டர் பந்திய தியென்னே?
**ராணி: கணினி வகுப்பு எங்கே இருக்கிறது?**

මාලා: බස් ස්ටෑන්ඩ් එක ළඟ.
பஸ் ஸ்டேன்ட் எக்க லங்க.
**மாலா: பேருந்து நிலையத்திற்கு அருகில்.**

රාණි: මටත් ආසයි කොම්පියුටර් ඉගෙන ගන්න.
மட்டத் ஆசய் கொம்பியூட்டர் இகென கன்ன.
**ராணி: எனக்கும் கணினி படிக்க விருப்பம்.**

මාලා: ඉතින් ඔයත් අපේ පන්තියට එන්න.
இத்தின் ஒயத் அப்பே பந்தியட்ட என்ன.
**மாலா: இனி நீங்களும் எங்கள் வகுப்புக்கு வாருங்கள்.**

රාණි: දැන් බැඳෙන්න පුළුවන්ද?
தென் பெந்தென்ன புலுவந்த?
**ராணி: இப்போது சேரலாமா?**

මාලා: ඔව්. තවම අලුත් ළමයි බැඳෙනවා.
ஒவ். தவம அலுத் ளமய் பெந்தெனவா.
**மாலா: ஆம். இன்னுமே புதுப் பிள்ளைகள் சேர்கின்றன.**

රාණි: මම ලබන සතියේ එන්නම්.
மம லபன சதியே என்னம்.
**ராணி: நான் அடுத்த வாரம் வருகிறேன்.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. எங்கே போகிறீர்கள்?
..................................................
2. போன கிழமை சேர்ந்தேன்.
..................................................
3. கணினி படிக்க விருப்பம்.
..................................................




**தன் கூற்று வாக்கியம் - பிறர் கூற்று வாக்கியம்**
**Direct speech & Indirect speech**

'தன் கூற்று' வாக்கியம் மற்றும் 'பிறர் கூற்று' வாக்கியம் என்பன தமிழ் மொழி இலக்கணத்தில் காணப்படுகின்ற இரண்டு வகை வாக்கியங்களாகும். இவையே, ஆங்கில மொழி இலக்கணத்தில் **'Direct speech'** மற்றும் **'Indirect speech'** என அழைக்கப்படுகின்றன. இவை பற்றி இங்கே விளக்கமாகப் பயில்வோம்.

**குறிப்பு: 1**
ஏதாவது ஒரு வாக்கியத்தை, (அதாவது, ஏதேனும் ஒரு விடயத்தை) ஒருவர் தனது வாயால் நேரடியாகக் கூறுகின்றபோது, அவ்வாக்கியம் 'தன் கூற்று' வாக்கியம் (Direct speech) எனப்படுகின்றது.

**குறிப்பு: 2**
ஒருவர் தனது வாயால் நேரடியாகக் கூறிய ஒரு விடயத்தை, மற்றொருவர் உள்வாங்கிக்கொண்டு, அதே விடயத்தை, அவர் வேறொருவருக்குத் தெரிவிக்கின்றபோது, (அதாவது, 'இன்னார் இவ்வாறு கூறினார்' என வேறொருவருக்குக் கூறுகின்றபோது) அவ்வாக்கியம், 'பிறர் கூற்று' வாக்கியம் (Indirect speech) எனப்படுகின்றது.

★ தகுந்த உதாரணங்கள்மூலம் அவற்றை இங்கே அவதானிப்போம்.

அ) The teacher said to Ravi, "Speak the truth"
ஆசிரியர் ரவியிடம் கூறினார், "உண்மையைப் பேசு" என்று.
(தன் கூற்று வாக்கியம்-Direct speech)

**விளக்கம்:** மேற்படி வாக்கியம், ஆசிரியர் ரவியை நோக்கி நேரடியாகக் கூறுவதாக அமைந்துள்ளது. எனவே, இவ்வாக்கியம் 'தன் கூற்று' எனப்படுகின்றது.

★ இதனைப் பிறர் கூற்று வாக்கியமாக பின்வருமாறு அமைக்கலாம்.

ஆ) The teacher told Ravi to speak the truth.
ஆசிரியர் ரவியை உண்மையைப் பேசுமாறு கூறினார்.
(பிறர் கூற்று வாக்கியம்-Indirect speech)

**குறிப்பு: 3**
மேற்படி (அ) தன் கூற்று வாக்கியத்தில், ஆசிரியர் ரவியிடம் கூறினார் எனும் வாக்கியப் பகுதியோடு காற்புள்ளி (,) இடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். அடுத்ததாக "உண்மையைப் பேசு" எனும் வாக்கியப் பகுதி மேற்கோள் குறிகளுக்குள் (" ") உள்ளடக்கப்பட்டுள்ளதையும் அவதானத்தில் கொள்ள வேண்டும்.

**குறிப்பு: 4**
மேற்படி (ஆ) பிறர் கூற்று வாக்கியத்தில், காற்புள்ளி மற்றும் மேற்கோள் குறிகள் என்பன தவிர்க்கப்பட்டுள்ளதை காணலாம்.

**குறிப்பு: 5**
தன் கூற்று ஆங்கில வாக்கியத்தில் said எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. ஆனால், பிறர் கூற்று ஆங்கில வாக்கியத்தில் told எனும் சொல் கையாளப்பட்டுள்ளது. இவற்றை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். இவை, ஆங்கில இலக்கண மரபு முறைகள் ஆகும்.

★ மேலும் சில குறிப்புகள்:

அ) "உண்மையைப் பேசு" - (தன் கூற்று)
"speak the truth" - (Direct speech)

ஆ) உண்மையைப் பேசுமாறு - (பிறர் கூற்று)
to speak the truth - (Indirect speech)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மே.இ.தீவுகளில் முதற்தடவையாக

# அனைத்துப் போட்டிகளும் பகலிரவு போட்டிகளாக...



ஜூன் மாதம் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள மும்முனை ஒருநாள் போட்டித் தொடர்கள் அனைத்தும் பகலிரவு போட்டிகளாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த போட்டிகளில் மே.இ. தீவுகள், அவுஸ்திரேலியா, தெ.ஆபிரிக்கா ஆகிய அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

மே.இ.தீவுகளில் அனைத்துப் போட்டிகளுமே பகலிரவு போட்டிகளாக நடைபெறுவது இதுவே முதற்தடவையாகும். இப்போட்டிகள் ஜூன் 3 ஆம் திகதி ஆரம்பமாகி ஜூன் 26 ஆம் திகதி இறுதிப் போட்டிகளுடன் நிறைவு பெறும். மே.இ.தீவுகள் கிரிக்கெட் சபையின் முகாமையாளர் இதுகுறித்து கருத்துத் தெரிவிக்கையில்; ரசிகர்களின் ரசனைக்கு தீனி போடுவதற்காகவே இவ்வாறு இப்போட்டிகளை பகலிரவு போட்டியாக நடத்த உத்தேசித்ததாகவும், ரசிகர்கள் இதனை மிகவும் விரும்புவார்கள் எனவும், கிரிக்கெட் வீரர்களும் இதனையிட்டு கூடிய ஈடுபாட்டை காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## நொவெச், சிமோனா 'மெட்ரிட்' வென்றனர்





இம்முறை 'மெட்ரிட்' பகிரங்க டென்னிஸ் போட்டியில் ஆடவர் பிரிவில் உலகின் முதன்மை நிலை டென்னிஸ் வீரரான சேர்பியாவைச் சேர்ந்த நொவெக் ஜெக்கோவிச் வெற்றியீட்டிய அதேவேளை, மகளிர் பிரிவில் ருமேனியா நாட்டைச் சேர்ந்த சிமோனா ஹாலிப் வெற்றியீட்டியுள்ளார். இம்முறை இறுதிப் போட்டிகளில் ஆடவர் பிரிவில் ஜெக்கோவிச்சுடன் இங்கிலாந்தின் என்டி மரேயும், மகளிர் பிரிவில் சிமோனாவுடன் ஸ்லோவேக்கியாவின் டொமினிகாவும் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் ஜெக்கோவிச் 2-1 என்ற கணக்கிலும், சிமோனா 2-1 என்ற கணக்கிலும் வெற்றியீட்டி செம்பியன் பட்டத்தை சூடிக்கொண்டனர்.




# தம்மிக்க பிரசாத்

## அடுத்த போட்டிகளில் இடம்பெறலாம்...?

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் தம்மிக்க பிரசாத் இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் கலந்துகொள்ள முடியாதபோதிலும் இரண்டாவது அல்லது மூன்றாவது டெஸ்ட் போட்டியில் அவர் போட்டியிடக்கூடிய ஏது நிலை இருப்பதாக இலங்கை அணியின் பயிற்றுனர் கிரஹம் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

பயிற்சிப் போட்டியொன்றின்போது, தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதையின் காரணமாகவே தம்மிக்க பிரசாத் உடற் தகுதியை இழக்க வேண்டிய நிலைக்கு ஆளாகினார். எனினும், இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பயிற்றுனர் ஃபோர்ட், தம்மிக்க பிரசாத்திற்குபோதிய உடற்கூற்று பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் இதன் காரணமாக, அவர் வழமை நிலைக்குத் திரும்பக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும், அடுத்து வரும் போட்டிகளில் தம்மிக்க கலந்துகொள்ள வாய்ப்புக்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

டெஸ்ட் போட்டிகளுக்கு முன்னோடி பயிற்சிப் போட்டியொன்றில் ஈடுபட்டிருந்தபோதே தம்மிக்க பிரசாத் உபாதைக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது.

## T20 தரப் பட்டியலில் நியூஸிலாந்து முதலிடத்தில்

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள T20 தரப்படுத்தல் பட்டியலில் முதலாவது இடத்தை நியூஸிலாந்து அணி பெற்றுள்ளது. சர்வதேச தரப்படுத்தலில் நியூஸிலாந்து அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளமை இதுவே முதலாவது சந்தர்ப்பமாகும். இதன்படி நியூஸிலாந்து அணி 132 புள்ளிகளுடன் முதலாவது இடத்தைப் பெற்றுள்ள அதேவேளை, இந்திய அணி 132 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. சம புள்ளிகளைக் கொண்டுள்ளபோதிலும் விகிதாசாரத்தின்படியே இந்திய அணி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் இந்தியாவில் இடம்பெற்ற T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் மே.இ. தீவுகள் அணி செம்பியனாகிய போதிலும் அவ்வணி மேற்படி தரப்படுத்தல் பட்டியலில் 122 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தையே பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏனைய அணிகள் வரிசைக் கிரமமாக வருமாறு;

04. தெ.ஆபிரிக்கா
05. இங்கிலாந்து
06. அவுஸ்திரேலியா
07. பாகிஸ்தான்
08. இலங்கை
09. ஆப்கானிஸ்தான்
10. பங்களாதேஷ்
11. நெதர்லாந்து
12. சிம்பாப்வே
13. ஸ்கொட்லாந்து
14. எமிரேட்ஸ்
15. அயர்லாந்து
16. ஓமான்
17. ஹொங்கொங்

noolaham.org | aavanaham.org


பல்லினை அப்புறப்படுத்திய பின்னர்


அப்புறப்படுத்திய பல்

# இங்கிலாந்தின் மிருகக்காட்சிசாலை பெண் யானைக்கு பற்சிகிச்சை

பிரித்தானியா மிருகக் காட்சிசாலையில் பல் வலியால் அவதியுற்ற பெண் யானைக்கு பல் வைத்தியரினால் சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது.

இந்த யானையின் சொத்தைப் பல்லினை அப்புறப்படுத்துவதற்கு கால்நடை மருத்துவ நிபுணர் ஒருவருக்கு பல் வைத்தியர்கள் உதவியுள்ளனர். ‘லூச்சா’ என்ற இந்த ஆசிய பெண் யானை பிரித்தானியாவின் Whipsnade மிருகக்காட்சிச்சாலையில் உள்ளது. சில நாட்களாக இந்த யானை உணவு உட்கொள்ளாமல் வேதனையுடன் இருப்பதனை மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் அவதானித்துள்ளனர். அதன் பின்னர் இந்த யானைக்கு கடைவாய்ப் பல்லில் கோளாறு இருப்பதனைக் கண்டறிந்துள்ளனர்.இதன்படி அவர்கள் விசேட கால்நடை மருத்துவரும் பல் மருத்துவ நிபுணருமான பீற்றர் கர்ட்டேசின் உதவியை நாடினர். இது குறித்து கருத்துத் தெரிவித்த மருத்துவர் கர்ட்டேஸ் “கடைவாய்ப் பல் ஒன்று பழுதடைந்துள்ளதனை வாயை பரிசோதிக்கும் போது கண்டுபிடித்தோம். நன்கு பயிற்றுவிக்கப்பட்ட கீழ்ப்படிவான யானை என்பதனால் அதன் பல்லைப் பரிசோதிக்கும் போது அது அமைதியாக இருந்தது” எனக் குறிப்பிட்டார்.


யானையின் பல்லினை சோதனையிடும் போது


பல்லினை அப்புறப்படுத்தும் போது

இதன்படி பல்லைக் கழற்றிவிடும் கடினமான பணிக்கு மருத்துவர் கர்ட்டேசுக்கு ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் தேவைப்பட்டுள்ளது. யானைக்கு மயக்க மருந்து வழங்கி பல்லைப் பிடுங்கும் காட்சியினை மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் காட்சிப்படுத்தியுள்ளனர். இந்த காட்சிகள் தற்போது இணையத்தளத்திலும் பிரபல்யம் பெற்றுள்ளது.

“நம்மில் பெரும்பாலானவர்கள் பல் வலிக்கு அஞ்சுவோம். ஆனால், வேதனையை உணர்த்த முடியாத லூச்சாவுக்கு உதவ முடிந்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது” என்று விலங்குகள் மருத்துவ சங்கத்தின் பிரதான கால்நடை மருத்துவ அதிகாரி நிக் மாஸ்டர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

மாணவப் பருவத்திலேயே பலவித ஆக்கத்திறன்களை மேற்கொண்டு இளம் சாதனையாளராக மிளிர்ந்து வருகின்றார் பூண்டுலோயாவைச் சேர்ந்த அபிஷேக் தேவர் சதீஸ்குமார் என்ற மாணவன் - பூண்டுலோயா தமிழ் மகா வித்தியாலயத்தில்





# மாணவன் அபிஷேக்கின் ஆக்கத்திறன் வெளிப்பாடு

தரம் 6 இல் கல்வி கற்கின்ற இவர் சிறிய மின் உபகரணங்களைப் பயன்படுத்தி பலவிதமான கருவிகளை உருவாக்கியுள்ளார். அத்துடன், கைப்பணிப் பொருட்கள், பலவற்றையும் உருவாக்கும் திறனையும் கொண்டுள்ள இவர் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி புதுவித கண்டுபிடிப்புக்களையும் உருவாக்கியுள்ளார். வெற்றுப் போத்தல்கள், நீர், மோட்டார் கருவி ஆகியனவற்றைக் கொண்டு மின் குமிழை ஒளிரச் செய்யும் கண்டுபிடிப்பும் இவற்றுள் ஒன்றாகும்.

அநேகமாக, புத்தாக்க முயற்சிகளில் மிகவும் ஆர்வம் கொண்டவராக திகழ்கின்ற அபிஷேக் படிப்பிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும்கூட சிறப்பைக் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை மட்டுமன்றி, ‘செஸ்’ விளையாடுவதிலும் திறமை மிக்க அபிஷேக் இதில் பல்வேறு சிறப்புச் சான்றிதழ்களையும் பெற்றுள்ளதுடன், சித்திரம், ஆக்கம், ஆங்கிலம் மாணவர் திறன் விருத்தி போன்ற போட்டிகளில் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வென்றுள்ளார்.






பூண்டுலோயா கார்மல் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற வயதிலேயே இவருக்கு இணைப்பாட விதான செயற்பாடுகளில் அதிக ஆர்வம் ஏற்படத் தொடங்கிவிட்டது என்று இவரது தந்தையாரான சதீஷ்குமார் சிவராமு குறிப்பிடுகின்றார்.

இளம் வயதில் இத்தனை ஆர்வமும், திறமையும் கொண்டுள்ள சதீஷ்குமாரின் சாதனைகள் தொடரவும், உரிய ஊக்குவிப்புக்கள் கிடைப்பதற்கும் நாமும் வாழ்த்துவோமாக.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பிரதான படத்திலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான பகுதிகளை அருகிலிருந்து தெரிவுசெய்து வெட்டி ஒட்டுக



வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப விடையளிக்குக

1. செவ்வகத்தில் ✓ அடையாளமிடுக.



2. நீள்வட்டத்தில் ✓ அடையாளமிடுக.



3. சதுரத்தில் ✓ அடையாளமிடுக.



குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக


apesrg ______


lgeae ______


mudr ______



owlely ______


etef ______


ownd ______




நேரம் என்ன?




அறிவுக்கு விருந்து (11.05.2016) விடைகள்













குறுக்கெழுத்துப் போட்டி: 189



## மேலிருந்து கீழ்

01. இராமனின் தாயார்.
02. கோடு.
03. ஆடவர் - எதிர்ப்பாற்சொல்.
06. பழங்களைப் பிழிந்து பெறப்படும்.
07. தியாகம் செய்யும் மனப்பான்மை கொண்டவர்.
08. தாவரத்தின் ஒரு பாகம். (தலைகீழ்)
10. வீடு. (தலைகீழ்)
11. அம்பு. (தலைகீழ்)

## இடமிருந்து வலம்

01. சிலப்பதிகாரத்தின் கதாநாயகன்.
04. பிழை- எதிர்ப்பதம்.
05. ஓர் உணவுவகை.
06. வீதி.
08. முடிவு. (மாறியுள்ளது)
09. பலம் கொண்ட விலங்கு. (மாறியுள்ளது)
10. பதுளை மாவட்டத்திற்குரிய நகரமொன்று.

குறுக்கெழுத்துப் போட்டி: 188 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தே | க் | கு | | 2 தி | ரி |
| ய் | | க் | 3 அ | ர | 4 கி |
| 5 பி | டி | 6 வா | த | ம் | |
| றை | | 7 வா | ர் | த் | தை |
| | | த | ம் | 8 ச | த் |
| 9 க | ல் | ம் | ம | | 10 அ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் விழா உலா த.பெ. எண் 2037 கொழும்பு

கல்பொக்க வெலிகமை யைச் சேர்ந்த ஹுஸைன் ரியாஸ்-பாத்திமா தம்பதிய ரின் செல்வப் புதல்வன் மொஹமட் ரஹீக், தனது பிறந்ததினத்தை 18.05.2016 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ரிம்லா ரியாஸ்)

## மட்டக்களப்பில் ஆசிரிய பயிலுனர் செயலமர்வு

கல்வி அமைச்சின்கீழ் இயங்கிவரும் மட்டக்களப்பு மாவட்ட தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரியில் 20ஆவது தொகுதி புதிய ஆசிரிய பயிலுனர்களுக்கு திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திசைமுகப்படுத்தல் செயலமர்வொன்று அண்மையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் வீதி விபத்துக்களில் இருந்து எவ்வாறு பாதுகாப்பது, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை மற்றும் பெண்களை பாதுகாப்பது எவ்வாறு தொடர்பான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.






மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.ராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இச்செயலமர்வில், வீதி விபத்துக்களை தடுப்பது எவ்வாறு என்ற அம்சத்தின்கீழ் விபத்துக்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள், மோட்டார் போக்குவரத்து வாகனச் சட்டம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.ஜி.திலங்க ஜெயலால் விரிவுரை நிகழ்த்தினார். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களை, பெண்களை பாதுகாப்பது எவ்வாறு, போதைவஸ்துப் பாவனையில் இருந்து இளைஞர்களை பாதுகாப்பது, துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கான தண்டனைகள் மற்றும் சட்டங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலைய சிறுவர், மகளிர் பணியகத்தின் பொலிஸ் உத்தியோகத்தர் ஆறுமுகம் விமலேஸ்வரி விரிவுரை களை நிகழ்த்தினார்.

குறித்த செயலமர்வில் 2016 தொடக்கம் 2018 ஆம் கல்வியாண்டுக்காக மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள 130 புதிய ஆசிரிய பயிலுனர்கள் கலந்துகொண்டதாக மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி யின் நிர்வாகத்திற்கான உப பீடாதிபதி எஸ்.ஜெயகுமார் தெரிவித்தார்.

(தகவல்: பழுலுல்லாஹ் பர்ஹான்)



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



றோ.அபினாஷ்,
யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.




எச்.சுவைட்,
அந்நூர் ஆரம்பப் பாட.,
ஹபுகஸ்தலாவை.




பு.திலீபன் திவா,
பரிசுத்த திருத்துவ ஆ.கல்.,
நுவரெலியா.





ச.சண்முகநாதன்,
லக்கம் த.வித்.,
மஸ்கெலியா.

எ. அக்ஷயா,
கொக்குவில் இந்து ஆரம்பப் பாட.,
கொக்குவில்.



பு.கயல்விழி,
பாரதி மகா வித்.,
தலவாக்கலை.



எம்.ரினேஸ்காந்,
சென்.மேரிஸ் ம.கல்.,
பொகவந்தலாவை.



இ.பிறின்சிகா,
இளவாலை கொன்வென்ற் ம.வித்.,
இளவாலை.



எச்.யோர்த்திகா,
புனித அந்தோனியார் ம.கல்.,
கொழும்பு-03.

## அதீ புத்திசாலியான தேனீக்கள்




தேனீக்கள் உண்மையில் புத்திசாலித்தனமான பூச்சிகளாகும். இவற்றால் அதிநவீன முறையில் தொடர்புகொள்ள முடியும். அதுமட்டுமன்றி அவற்றின் கண், பார்வைக்கு அப்பாற்பட்டிருக்கும் இலக்குகளைக் கூட உணர முடியும். அனேகமாக, தேனீக்கள் மேலும் கீழுமாக ஆடிக் கொண்டே ஒன்றையொன்று தொடர்புகொள்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தேனீக்கள் தேன் சேகரிப்பில் ஈடுபட்ட பின் மேலும் கீழுமாக ஆடும் தமது சக தேனீக்களுடன் தொடர்பு கொண்டு தாம் இருக்கும் இடத்தில் இருந்து எந்தக் கோணத்தில் சென்றால் கூட்டினை அடைய முடியும் என்பதைத் தெரிந்துகொள்கின்றன. இதே போல்தான் உணவு எங்குள்ளது என்பதையும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு தகவலைப் பகிர்ந்துகொள்கின்றன. இவ்வாறு மேலும் கீழுமாக ஆடும் ஆட்டத்தினை வைத்து சூரியனை நோக்கிச் செல்ல வேண்டுமா? சூரியனை விலகிச் செல்ல வேண்டுமா, அல்லது அங்கிருந்து எப்பக்கம் திரும்ப வேண்டும் என்று இவை புரிந்துகொள்கின்றன.

noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தமிழ் மொழி சான்றோர்கள்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்



இலங்கை திருநாட்டின் யாழ் நகரிலுள்ள நல்லூரில் கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு ஆறுமுகம்பிள்ளை எனும் இயற்பெயருடன் 18 ஆம் திகதி மார்கழி மாதம் 1822 ஆம் ஆண்டு ஆறுமுகநாவலர் பிறந்தார்.

தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற பல தமிழறிஞர்களிடம் கல்வி கற்ற ஆறுமுகநாவலர் மூத்த சகோதரனின் மேற்பார்வையில் அக்காலத்தில் யாழ் நகரின் முன்னணி ஆங்கிலப் பாடசாலையான மெதடிஸ்த ஆங்கிலப் பாடசாலையில் கல்வியினை தொடர்ந்தார். ஆங்கில மொழியில் தேர்ச்சியடைந்த நாவலர் தமது 20 ஆவது வயதில் இப்பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

அதனை தொடர்ந்து சைவ சமயத்திற்கும் தமிழ் மொழிக்கும் பணியாற்றத் தொடங்கினார். அதற்காக, பல பிரச்சாரங்களையும் மக்கள் மத்தியில் நிகழ்த்தினார். இவரின் முதலாவது பிரச்சாரம் வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 31 ஆம் திகதி மார்கழி மாதம் 1847 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டது. அத்தோடு, சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற சைவ பாடசாலையையும் ஆரம்பித்தார். 1849 ஆம் ஆண்டு சென்னைக்கு சென்ற இவர், அச்சிடுவதற்கு அச்சியந்திரம் ஒன்றை கொள்வனவு செய்து தமது இல்லத்தில் 'வித்தியானுபாலானயந்திரசாலை' எனும் அச்சுக் கூடத்தை நிறுவினார். அதன் மூலம் சைவ பாடநூல், பாலபாடம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் உரை, சிவாலய தரிசனவிதி, நன்னூல் விருத்தியுரை என பல இலக்கண, இலக்கிய நூல்களையும் 1872 ஆம் ஆண்டு ஐப்பாசி மாதம் வரை நாவலர் தமது வாழ்வில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு, 'யாழ்ப்பாணச் சமயநிலை' எனும் நூலையும் எழுதி வெளியிட்டார்.

> 'தமிழ் மொழிக்கும், இலங்கையின் அச்சுக்கலைக்கும் பெரும் சேவையாற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்' அவர்கள்

சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும் என தமது சேவையை மட்டுப்படுத்தாத நாவலர் அவர்கள் இலங்கையின் அச்சுக் கலைக்கும் பெரும் சேவையாற்றினார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் 5 ஆம் திகதி மார்கழி மாதம் 1879 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கினார்.




வெல்லுங்கள்! விஜய் – தூவானம் வழங்கும் வாரம் 3 பரிசில்கள்!

★ Practical English Learning Software DVD



★ 4000 English Letter Writing Software



★ 8 GB Pen Drive



புதன்தோறும் வெளிவரும் 'விஜய்' பத்திரிகைகளை நன்கு வாசித்து அதனை தொடர்ந்து வரும் ஒவ்வொரு புதன்கிழமையிலும் 'Thoovaanam' SMS ஊடாக கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் 8GB Pen Drive இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்கத் தொலைபேசியில் செயற்படுத்திக்கொள்ளுங்கள்.

★ 'Thoovaanam' SMS ஊடாக, கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் மாத்திரமே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாராந்தம்...

★ ஆங்கிலம் கற்கும் மென்பொருள் DVD

★ 4000 ஆங்கில மாதிரிக் கடிதங்கள் அடங்கிய மென்பொருள்

★ 8GB பென் டிரைவ் போன்றன இலவசமாக வழங்கப்படும்.

*11.05.2016 'தூவானம்' கேள்விக்கான விடை:*
இலங்கை சமசமாஜக் கட்சி
**Pendrive** வெற்றியாளர்:
ஆர்.பாரதகாந்தன்,
155/12, தவளசிங்கராம மாவத்தை,
கொழும்பு-15.

'Thoovaanam' SMS செயற்படுத்தும் முறை


Write Message
**F Thoovaanam என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்**

அனுப்ப வேண்டிய முகவரி:
Pen Drive போட்டி (25.05.2016)
விஜய்
த.பெ.இல 2037
கொழும்பு

இவ்வார கூப்பன்:
25.05.2016
விடை: ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
தெ.பே.இல: ..............................
பாடசாலை: ..............................
தரம்: ..............................
..................
கையொப்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீரில் நெருப்பு விளையாட்டு



நீரினுள் நெருப்பினைக் கொண்டு செல்லக் கூடிய கடினமான வேலையை இன்று நாம் விஞ்ஞான விந்தைப் பகுதியில் இலகுவாக செய்து பார்ப்போம்.

தேவையானவை:

★ 2 வெற்றுக் கண்ணாடிக் குவளை (ஊடுருவித் தென்பட வேண்டும்)
★ உணவு நிறமூட்டிகள்
★ வெந்நீர்
★ மரக்கறி எண்ணெய் இரண்டு தேக்கரண்டி




## இவ்வாறு செய்வோம்!

★ ஒரு குவளையில் நான்கின் ஒரு பங்கில் வெந்நீர் நிரப்பிக் கொள்ளுங்கள்.
★ மரக்கறி எண்ணெயினையும், நிறமூட்டிகளையும் மற்றக் குவளையில் இடுங்கள்.
★ கரண்டியினால் இவை அனைத்தையும் ஒன்றாகக் கலக்குங்கள்.

இங்கு எண்ணெயுடன் அவை கலந்துவிடாமல் ஆங்காங்கே சிறு புள்ளிகளாக இருப்பதனை காண்பீர்கள்.

★ பின்பு இந்த எண்ணெய் கலவையினை வெந்நீர் குவளைக்குள் இடுங்கள்.
★ இப்பொழுது தான் நீரினுள்ளே நெருப்பு விளையாட்டு ஆரம்பமாகப் போகின்றது. நிறங்கள் குவளையின் அடியில் செல்லும்போது, நீருனுள்ளே நெருப்பு சிதறுவதனைக் காணமுடியும்.

## நடைபெறுவது என்ன?

இது ஒவ்வொரு பொருட்களினதும் அடர்த்தி சம்பந்தப்பட்ட பாடமாகும். உணவு நிறமூட்டிகள் நீரில் கரைகின்றன. ஆனால் எண்ணெய்யில் கரைய மாட்டாது. இந்த கலவையினை நீரில் இடும்போது எண்ணெய் நீரின் மேலே மிதக்கின்றது. ஏனெனில், நீரினை விட எண்ணெய் அடர்த்தி குறைவானது, ஆனால், நிறமூட்டியானது, நீரில் கரையும் தன்மை கொண்டது.



ஆதலால், நிறமூட்டிகள் நீரின் ஆழத்தினை நோக்கிச் செல்கின்றது. இதனால் நீரில் கரைய ஆரம்பிக்கும் போது, நெருப்பு பொறி போன்று சிறிய வெடிப்புகள் நீரில் உருவாகின்றன.

---

# வனப்பு மிகு கடற்கரை 2016

## அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி



### தலைப்பு

கடற் பன்றிகள், கடல் ஆமைகள், கண்டல் தாவர சூழல், பவளப்பாறைகள் ஆகிய கரையோர வளங்கள் மற்றும் கடற்கரை சார்ந்த எந்தவொரு நிகழ்வும்

### போட்டி பற்றிய தகவல்களும் நிபந்தனைகளும்

ஒருவர் ஒரு சித்திரத்தினையே சமர்ப்பிக்க முடியும். சித்திரத்தின் அளவு 35 சென்ரி மீற்றர் மற்றும் 45 சென்ரி மீற்றர் ஆக இருக்க வேண்டும். எந்தவொரு ஊடகத்தினையும் நிறங்களுக்காக பயன்படுத்தலாம். சித்திரத்தின் பின்பகுதியில் போட்டியாளரின் பெயர், தனிப்பட்ட விலாசம், தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி, கற்கும் பாடசாலை, வகுப்பு, பாடசாலையின் முகவரி மற்றும் போட்டியிடும் பிரிவு ஆகியவற்றினை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

### போட்டிப் பிரிவு

முன்பள்ளி மாணவர்கள்:
ஆரம்ப நிலை: 1, 2, 3, 4, 5 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்.
கனிஷ்ட பிரிவு: 6, 7, 8, 9, 10 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்
சிரேஷ்ட பிரிவு: 11, 12, 13 தரங்களை சேர்ந்த மாணவ, மாணவியர்

தமது சித்திரத்தினை 2016 மே 31 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*'கடற்கரையின் வனப்பு - 2016'*
*அகில இலங்கை பாடசாலை மட்ட சித்திரப் போட்டி,*
*இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்,*
*இல. 150, பழைய காலி வீதி, வலான, பாணந்துறை.*

மேலதிக விபரங்களுக்கு 038- 3370522 என்னும் தொலைபேசி இலக்கங்களினூடாக காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இலங்கை கடல் ஆமைகள் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள். போட்டிக்கு அனுப்பப்படும் ஓவியங்கள் எக்காரணங்களுக்காகவும் மீள அளிக்கப்பட மாட்டாது.

### பணப் பரிசில்கள்

*முன் பள்ளி*
முதலாம் இடம் ரூ. 7,000.00
இரண்டாம் இடம் ரூ. 5,000.00
மூன்றாம் இடம் ரூ. 3,000.00

*ஆரம்ப நிலை*
முதலாம் இடம் ரூ. 10,000.00
இரண்டாம் இடம் ரூ. 7,000.00
மூன்றாம் இடம் ரூ. 5,000.00

*கனிஷ்ட பிரிவு*
முதலாம் இடம் ரூ. 15,000.00
இரண்டாம் இடம் ரூ. 10,000.00
மூன்றாம் இடம் ரூ. 7,000.00

*சிரேஷ்ட பிரிவு*
முதலாம் இடம் ரூ. 20,000.00
இரண்டாம் இடம் ரூ. 15,000.00
மூன்றாம் இடம் ரூ. 12,000.00

ஒரு பிரிவில் தெரிவு செய்யப்படும் சிறந்த நூறு சித்திரங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.



# காட்டு மல்லிகை

தாவரவியல் பெயர்: *Jasminum angustifolium*
ஆங்கிலப் பெயர்: Wild Jasmine
சிங்களப் பெயர்: வல் பிச்ச, வல் சமன் பிச்ச, சமன் பிச்ச.

காட்டு மல்லிகை என்பது, கொடியாகவும் புதராகவும் வளரும் ஒரு தாவர இனமாகும். இது தமிழில் 'பித்திகம்' என்றும் அழைக்கப்படுகின்றது. Oleaceae தாவர குலத்தைச் சேர்ந்த காட்டு மல்லிகை, அதிக வாசனை கொண்டது. தாவரம் முழுவதும் மலர்கள் பூக்கும்.



பெப்ரவரி, ஏப்ரல் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் அதிகளவு மலர்கள் பூக்கும். இலங்கையின் தாழ்நாட்டு உலர் வலயத்தில் பரவலாகக் காணமுடியும். இந்து மற்றும் பௌத்த மத ரீதியிலான வைபவங்களில் இந்த மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் வேரும் இலைகளும் மருத்துவ தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றன. இலங்கை, இந்தியா மற்றும் அந்தமான் தீவுகளில் காட்டு மல்லிகை பரவலாக வளரும்.



# பாசிக்காளான்

'பாசிக்காளான்' (பாசிப்பூஞ்சை - Lichen) என்பது, ஒரு கூட்டுத்தாவரமாகும். இது சிறிய சுற்றாடல் தொகுதியாகவும் கருதப்படுகின்றது. இலங்கையின் பலதரப்பட்ட சுற்றாடல் தொகுதிகளில் பாசிக்காளான்கள் வளர்கின்றன. இலங்கைக்கே உரியதாக சுமார் 100 வகையான பாசிக்காளான்கள் உள்ளன. இவை ரசாயன மருந்துகள், வாசனைத் திரவியங்கள், நிறமூட்டிகள் போன்றவற்றை தயாரிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. உலகில் சுமார் 4,000 வகையான பாசிக்காளான்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவை மெதுவாக வளர்வதோடு, நீண்டகாலம் உயிர் வாழும் தன்மை கொண்டதாகும். அதன்படி, பாசிக்காளான்கள் 2,000 வருடங்கள் உயிர் வாழும் எனக் கண்டறியப்பட்டுள்ளதோடு, வட மற்றும் தென் துருவப் பிரதேசங்களில் சுமார் 3,000 ஆண்டுகளுக்கும் மேலாக உயிர்வாழும் பாசிக்காளான்களும் காணப்படுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

# கடலில் திண்மக் கழிவுகளைக் கொட்டும் நாடுகள்

## இலங்கைக்கு 5 ஆவது இடம்



கடலில் ப்ளாஸ்டிக் உட்பட, திண்மக் கழிவுகளைக் கொட்டும் நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தை வகிப்பதாக ஆய்வொன்றின்மூலம் தெரியவந்துள்ளது. International Business Times என்ற சஞ்சிகையே இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளது. உலகிலுள்ள 192 நாடுகள் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதில் முன்னிலை வகிக்கும் இருபது நாடுகளின் பட்டியலில், சீனா முதலிடத்தை வகிக்கின்றது. இரண்டாவது இடத்தில் இந்தோனேஷியாவும் மூன்றாவது இடத்தில் பிலிப்பைன்ஸும் நான்காவது இடத்தில் வியட்நாமும் உள்ளன. இலங்கை ஐந்தாவது இடத்தை வகிப்பதாக தெரியவந்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கடற்பரப்பில் 13 மில்லியன் தொன் இற்கும் மேற்பட்டளவிலான திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதாகவும், இதில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவை குறித்த பட்டியலில் முன்னிலை வகிக்கும் 20 நாடுகளிலிருந்து கடலில் கொட்டப்படும் கழிவுகளாகும் எனவும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PERIODICAL
JAFFNA PUBLIC LIBRARY




# வண்ணத்துப்பூச்சிகள் ஆபத்தானவையா?



வண்ணத்துப்பூச்சிகள் பல வண்ண நிறங்களில் காணப்படும். உலகில் சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட வண்ணத்துப்பூச்சி வகைகள் உள்ளன. இவற்றில் *Danaus Plexippus* எனும் உயிரியல் பெயரால் அழைக்கப்படுகின்ற வண்ணத்துப்பூச்சிகள் (Moranch butterflies), பறவைகளுக்கு ஆபத்தினை ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கின்றன.

இதனால், பறவைகள் பெரும்பாலும் இந்த வண்ணத்துப்பூச்சிகளை உட்கொள்வதில்லை என்றே கூறப்படுகின்றது. அப்படியே உட்கொண்டாலும், அவற்றுக்கு உணவு ஒவ்வாமை ஏற்பட்டுவிடுமாம்!




ஏனெனில், இந்த வண்ணத்துப்பூச்சிகள் பெரும்பாலும் விஷச்செடிகளின் இலைகளிலேயே முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும்.

அந்த முட்டையிலிருந்து வெளிவரும் கம்பளிப்பூச்சிகள் அந்த விஷ இலைகளை உட்கொண்டே வளர்கின்றன. இதனால், அவற்றின் உடலிலும் அந்த விஷத்தன்மை சேர்ந்துவிடுகிறது. வண்ணத்துப்பூச்சியாக முழு வளர்ச்சியடைந்த பிறகும் இந்த விஷத்தன்மை அவற்றின் உடலில் இருக்கும். அதனால்தான் பறவைகள் இந்த வண்ணத்துப்பூச்சிகளை உண்பதில்லை என இது தொடர்பான ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளது. ஆனால், வயது செல்லச் செல்ல அவற்றின் உடலில் விஷத்தன்மை குறைந்துவிடுகின்றது. அப்போது அதன் நிறமும் மங்கிவிடும். இதைப் புரிந்துகொள்ளும் சில பறவைகள், அவற்றை உட்கொண்டுவிடுகின்றன.

## இவ்வார கார்ட்டூன் படம்






# நாம் ஒட்சிசனை மட்டும் எவ்வாறு சுவாசிக்கின்றோம்?

நம்மைச் சூழ உள்ள வளியில் நைதரசன், ஒட்சிசன், ஆர்கன், காபனீரொட்சைட், நியோன், ஹீலியம், மீத்தேன், நைதரசன் ஒக்சைட், ஐதரசன், ஓசோன் போன்ற பல்வேறு வாயுக்களும் கலந்திருக்கின்றன. இவை மட்டுமன்றி, நீராவி, தூசு துகள்களும் ஏனைய மாசுக்களும்கூட வளியில் கலந்திருக்கின்றன. இவ்வாறு வளியில் பலவித வாயுக்கள் கலந்திருந்தாலும், நாம் ஒட்சிசனை மட்டும் எவ்வாறு சுவாசிக்கின்றோம் என்று தெரியுமா?


அதாவது, நாம் சுவாசிக்கும்போது, மூச்சுக்குழாய் வழியே எமது நுரையீரலை அடையும் வளியானது, நுரையீரலில் உள்ள மிகவும் நுண்ணிய குழாய்களை அடைந்ததும், அங்கு இடம்பெறும் வேதியியல் மாற்றத்தால் ஒட்சிசன்



மட்டும் சிறிதளவு நம் இரத்தத்திலுள்ள ஹீமோக்ளோபினுடன் கலக்கின்றது. பின்னர், ஒட்சிசனைக் காவிச் செல்லும் இரத்தம் உடலெங்கும் உள்ள கலங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

பொதுவாக, வளியில் அதிகமாக உள்ள நைதரசன், நம் உடலில் எதனுடனும் வினை புரியாத தன்மை கொண்டதாகும். எனவே, நாம் சுவாசிக்கும்போது, எவ்வளவு நைதரசன் உள்ளே போகிறதோ, அதே அளவு நைதரசன் நம் வெளிச்சுவாசத்தினூடாக வெளியேறுகிறது. இதைத் தவிர, காபனீரொட்சைட்டும் ஏனைய வாயுக்களும்கூட எமது வெளிச்சுவாசத்தின்போது வெளியேற்றப்படுகின்றன.

# கீஸாவின் பெரிய பிரமிட்



எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் புறநகர் பகுதியில் கீஸா பீடபூமியில் அமைந்துள்ள மூன்று பிரமிட்களில், மிகப் பெரியதும் காலத்தால் முந்தியதுமான பிரமிட்டாக 'கீஸாவின் பெரிய பிரமிட்' கருதப்படுகின்றது. பண்டைய எகிப்தியர்களால் நிர்மாணிக்கப்பட்ட இது, பண்டைய ஏழு உலக அதிசயங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. சுண்ணக்கற்கள், கருங்கற்பாறைகள் போன்றவற்றைப் பயன்படுத்தியே, கீஸாவின் பெரிய பிரமிட் கட்டப்பட்டுள்ளது. இதனுள் எகிப்திய ஃபாரோக்களின் (மன்னர்களின்) இறந்த உடல்கள் பதப்படுத்தப்பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2016, மே 25 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 25, 2016.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org